www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

KSJ
Knowledgeful Successful Joyful

# சுடரொளி தமிழ் உரை

• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி



## 9th

# தமிழ்

புதிய பாடத்திட்ட அடிப்படையில் உருவாக்கம்

- அரசு வினாத்தாள் அடிப்படையிலான உரை
- மீத்திறன் மாணவர்களுக்கான கூடுதல் வினாக்கள்
- மெல்ல மலரும் மொட்டுகளுக்கான எளிய விடைகள்

For Orders : 89036 85635 / 74180 21847

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பொருளடக்கம்


| வ. எண். | வினாத்தாள் வடிவமைப்பு | வினாத்தாள் வினா எண் | பாடநூல் பக்க எண் | உரைநூல் பக்க எண் |
|---|---|---|---|---|
| 1 | மனப்பாடப்பகுதி | 21, 34 | 10, 41, 44, 87, 103, 105, 133, 158, 177, 187, 189, 219, 237, | 1,2 |
| | **பகுதி – I (15x1=15)** | | | |
| 2. | பலவுள் தெரிக | 1-11 | 25, 56, 81, 116, 144, 172, 202, 226, 248 | 2-12 |
| 3. | பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருதல். | 12-15 | | 13-32 |
| | **பகுதி – II (9x2=18)** | | | |
| 4. | **பிரிவு - 1 (4x2=8)** விடைக்கேற்ற வினா அமைத்தல் | 16 | | 33,34 |
| 5. | செய்யுள், உரைநடை குறு வினாக்கள் | 17-20 | 26, 56, 81, 117, 145, 172, 203, 225, 248 | 34-43 |
| 6. | **பிரிவு - 2 (5x2=10)** இலக்கண வினாக்கள் | | 26, 172, 226, 248 | 44-48 |
| 7. | கற்பவை கற்றபின், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு | 22-25 | 23, 55, 80, 115, 142, 170, 201, 225, 247 | 48-77 84-105 |
| 8. | கலைச்சொற்களைத் தமிழாக்கம் செய்தல் | 26 | 27, 30, 62, 94, 121, 149, 175, 207, 230, 252 | 77,78 |
| 9. | அகராதியில் பொருள் காணுதல் | 27 | 28, 59, 84, 120, 148, 175, 206, 229, 251 | 79,80 |
| 10. | பகுபத உறுப்பிலக்கணம் | 28 | 9, 12, 38, 43, 46, 71, 106, 132, 160, 162, 188, 189, 191, 216, 218, 219, 237, 240 | 80-84 |
| | **பகுதி – III (6x3=18)** | | | |
| 11. | **பிரிவு - 1 (2x3=6)** உரைநடை சிறுவினாக்கள் | 29, 30 | 26, 57, 82, 117, 145, 172, 180, 227, 248 | 106-111 |
| 12. | உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல். | 31 | 6, 32, 83, 102, 147, 153, 183, 211, 232 | 111-115 |
| 13. | **பிரிவு - 2 (2x3=6)** செய்யுள் சிறுவினாக்கள் | 32, 33 | 26, 57, 82, 117, 145, 172, 203, 227, 248 | 115-120 |




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| | | | | |
|---|---|---|---|---|
| 14. | பிரிவு - 3 (2x3=6)<br>இலக்கண, துணைப்பாட சிறுவினாக்கள் | 35, 36 | 26, 82, 117, 172, 203, 248 | 121-123<br>135-143 |
| 15. | அலகிடுதல் | 37 | 87, 177 | 123-135 |
| | பகுதி – IV (5x5=25) | | | |
| 16. | செய்யுள் நெடுவினாக்கள் | 38 | 26, 57, 145, 173, 203, 227 | 144-149 |
| 17. | கடிதம், உரை எழுதுதல் | 39 | 28, 149, 228, 50, 83, 251 | 149-155 |
| 18. | காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல் | 40 | 29, 61, 86, 120, 149, 175, 206, 230, 252 | 155-159 |
| 19. | வடிவம் மாற்றுதல் | 41 | 27, 28, 83, 118, 119, 147 | 160-163 |
| 20. | நிற்க அதற்குத் தக | 42 (அ) | 30, 61, 86, 121, 149, 175, 207, 230, 252 | 163-166 |
| 21. | மொழிபெயர்த்தல் | 42 (ஆ) | 27, 58, 82, 118, 146, 173, 204, 227, 250 | 166-169 |
| 22. | செய்யுள் நயம் பாராட்டுதல் | - | 28, 59, 119, 205, 228, 251 | 170-177 |
| | பகுதி – V (3x8=24) | | | |
| 23. | உரைநடை நெடுவினாக்கள் | 43 | 26, 82, 145, 173, 203, 227, 248 | 177-186 |
| 24. | துணைப்பாட நெடுவினாக்கள் | 44 | 57, 82, 117, 145, 173, 203, 227, 248 | 186-199 |
| 25. | பொதுக்கட்டுரைகள் | 45 | 205 | 199-219 |
| 26. | செய்யுள், உரைநடை, துணைப்பாடம் கற்பவை கற்றபின் வினாக்கள் | - | - | 220-260 |
| 27. | மாதிரி வினாத்தாள்கள் - விடைக்குறிப்பு | | | 260,261 |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# 1. மனப்பாடப்பகுதி

## இயல் - 1

### தமிழ்விடு தூது

**சீர்பெற்ற செல்வம்**

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ - திறம்எல்லாம்

வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே.

- அறியப்படவில்லை

## இயல் - 2

### பெரியபுராணம்

(பா.எண் : 69)

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்.

- சேக்கிழார்

### புறநானூறு

(புறம் 18-23)

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே! - குடபுலவியனார்

## இயல் - 3

### திருக்குறள்

**பொறையுடைமை** (அதிகாரம் 13)

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

**கேள்வி** (அதிகாரம் 42)

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

**வினைத்தூய்மை** (அதிகாரம் 66)

ஒஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

- திருவள்ளுவர்

## இயல் - 4

### ஓ, என் சமகாலத் தோழர்களே!

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகா லன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்

ஏவும் திசையில் அம்பைப் போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

- வைரமுத்து

### உயிர்வகை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

(நூ.எண் : 1516) - தொல்காப்பியர்

## இயல் - 5

### சிறுபஞ்சமூலம்

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

(பா.எண் : 22) - காரியாசான்

## இயல் - 6

### இராவண காவியம்

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்.

(பா.எண் : 72) - புலவர் குழந்தை

### திருக்குறள்

**குடிமை** (அதிகாரம் 96)

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

**சான்றாண்மை** (அதிகாரம் 99)

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

**நாணுடைமை** (அதிகாரம் 102)

பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

**உழவு** (அதிகாரம் 104)

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

- திருவள்ளுவர்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் - 7** (பா.எண் : 53)

**சீவக சிந்தாமணி**

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

**- திருத்தக்கத்தேவர்**

**முத்தொள்ளாயிரம்**

**சேரநாடு**

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப்பு ள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

**- அறியப்படவில்லை**

**இயல் - 8**

**யசோதர காவியம்**

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.

**- அறியப்படவில்லை**

**இயல் - 9**

**அக்கறை**

சைக்கிளில் வந்த
தக்காளிக் கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள்
மீதான அக்கறை.

**- கல்யாண்ஜி**

## பகுதி - I (15x1=15)

## 2. பலவுள் தெரிக

**இயல் - 1** **(பா.நூ.ப.எண்: 25)**

**1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| குழு - 1 | குழு - 2 | குழு - 3 | குழு - 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| ---- | ---- | ---- | ---- |

அ) 1 - வங்கம், 2 - மானு, 3 - தாழிசை, 4 - பிறவினை
ஆ) 1 - தாழிசை, 2 - மானு, 3 - பிறவினை, 4 - வங்கம்
இ) 1 - பிறவினை, 2 - தாழிசை, 3 - மானு, 4 - வங்கம்
ஈ) 1 - மானு, 2 - பிறவினை, 3 - வங்கம், 4 - தாழிசை **விடை: அ**

**2. தமிழ் விடு தூது ................ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.**

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல் **விடை: இ**

**3. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.**

அ) ............ இனம் ஆ) வண்ணம் ............ இ) ............ குணம் ஈ) வனப்பு ............

அ) மூன்று, நூறு, பத்து, எட்டு ஆ) எட்டு, நூறு, பத்து, மூன்று
இ) பத்து, நூறு, எட்டு, மூன்று ஈ) நூறு, பத்து, எட்டு, மூன்று **விடை: அ**

**4. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! - எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் ............**

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி **விடை: இ**

**5. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு .............**

அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை **விடை: ஆ**





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

41. முண்டி மோதும் துணிவே இன்பம் - இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது..............
அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி **விடை: இ**

42. விடைக்கேற்ற வினாவைத் தேர்க. விடை - பானையின் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.
அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?
ஆ) பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?
இ) பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது?
ஈ) பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது? **விடை: அ**

43. 'ஞானம்' என்பதன் பொருள் யாது?
அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு **விடை: ஈ**

**இயல் - 9** (பா.நூ.ப.எண்: 248)

44. இமயத்துக் கோடு உயர்ந்தன்ன - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?
அ) கொம்பு ஆ) மலையுச்சி இ) சங்கு ஈ) மேடு **விடை: ஆ**

45. தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை .............
அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல்
இ) இம்மை மறுமை ஈ) ஒன்றே உலகம் **விடை: ஈ**

46. வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுத் தந்த நூல் ...............
அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின் இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல் **விடை: அ**

47. யா மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?
அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல் **விடை: இ**

48. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி ...............
அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி
இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப் புகழ்ச்சியணி **விடை: ஆ**

## கூடுதல் வினாக்கள்

**இயல் - 1**

1. இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று கூறியவர் ............
அ) குமரிலபட்டர் ஆ) ஹீராஸ் பாதிரியார்
இ) ச.அகத்தியலிங்கம் ஈ) மாக்ஸ் முல்லர் **விடை: இ**

2. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் ...............
அ) குமரிலபட்டர் ஆ) ஹீராஸ் பாதிரியார்
இ) பிரான்சிஸ் எல்லிஸ் ஈ) ஹோக்கன் **விடை: அ**

3. கீழ்க்கண்டவற்றுள் தென்திராவிடமொழி அல்லாதது எது?
அ) கன்னடம் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) துளு **விடை: ஆ**

4. பொருந்தாத இணைகளைத் தேர்ந்தெடுக்க.
I) தமிழ் - தொல்காப்பியம்
ii) தெலுங்கு - ஆந்திரபாஷா பூஷணம்
iii) கன்னடம் - லீலா திலகம்
iv) மலையாளம் - கவிராஜ மார்க்கம்
அ) i, iii ஆ) iii, iv இ) i, ii ஈ) ii, iv **விடை: ஆ**

5. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?
அ) மாக்ஸ்முல்லர் ஆ) கால்டுவெல்
இ) ஹீராஸ் பாதிரியார் ஈ) ச.அகத்தியலிங்கம் **விடை: ஆ**

6. உலகத் தாய்மொழி நாள் ..............
அ) அக்டோபர்-2 ஆ) பிப்ரவரி-2 இ) நவம்பர்-14 ஈ) பிப்ரவரி-21 **விடை: ஈ**

7. 'வாயில் இலக்கியம்' 'சந்து இலக்கியம்' என்றெல்லாம் அழைக்கப்படுவது ..................
அ) பள்ளு ஆ) தூது இ) பிள்ளைத்தமிழ் ஈ) சிந்து **விடை: ஆ**

8. பின்வருவனவற்றுள் நடுத்திராவிட மொழி எது?
அ) தமிழ் ஆ) மலையாளம் இ) தெலுங்கு ஈ) மால்தோ **விடை: இ**



www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 3. பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருதல்

### அட்டவணை - செய்யுள்

| இயல் | | செய்யுள் தலைப்பு | ஆசிரியர் பெயர், நூற்றாண்டு | நூல் தலைப்பு, தொகுப்பு | ஆசிரியரின் பிற நூல்கள் | ஆசிரியரின் பிற சிறப்புகள் | பாடல் தொடக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| இயல் 1 | (i) | **தமிழோவியம்** | ஈரோடு தமிழன்பன் | தமிழோவியம் | **கவிதை நூல்கள் :** (ஹைக்கூ, சென்ரியு) 'வணக்கம் வள்ளுவ' | 'வணக்கம் வள்ளுவ' நூலுக்கு 2004 ஆம் ஆண்டுக்கான **சாகித்திய அகாதெமி விருது.**<br>**மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள்:** இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் | காலம் பிறக்கும் முன் .....<br>அகமாய்ப் புறமாய் .....<br>ஏனிவ் விருட்டெனக் .....<br>எத்தனை எத்தனை .....<br>விரலை மடக்கியவன் ..... |
| | (ii) | **தமிழ்விடு தூது** | ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை | **தமிழ்விடு தூது தொகுப்பு :** 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று<br>**பாவகை :** கலிவெண்பா | **நூலின் வேறு பெயர்கள் :** வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் | **தூதுவிடும் பொருட்கள் :** அன்னம் முதல் வண்டு வரை பத்துப் பொருட்கள் 268 கண்ணிகளை உடையது. இந்நூலை **1930** இல் **உ.வே.சா.** முதன்முதலில் பதிப்பித்தார். | தித்திக்கும் தெள் அமுதாய்த் .....<br>குறம் என்றும் .....<br>வந்து என்றும் .....<br>முற்றும் உணர்ந்த .....<br>ஆக்கிய வண்ணங்கள் .....<br>ஊனரசம் ஆறுஅல்லால் .....<br>அழியா வனப்பு ..... |
| இயல் 2 | (i) | **பட்டமரம்** | கவிஞர் தமிழ்ஒளி (1924-1965) | **நூல் தொகுப்பு :** தமிழ்ஒளியின் கவிதைகள் | **படைப்புகள் :** நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம் | **பாரதியாரின்** வழித்தோன்றலாகவும் **பாரதிதாசனின்** மாணவராகவும் விளங்கியவர். | மொட்டை கிளையோடு .....<br>வெட்டப்படும் ஒரு .....<br>குந்த நிழல்தரக் .....<br>வெந்து கருகிட...<br>கட்டை யெனும்பெயர்...<br>பட்டை யெனும்உடை...<br>காலம் எனும்புயல்....<br>ஓலமி டக்கரம்...<br>பாடும் பறவைகள்...<br>மூடு பனித்திரை...<br>ஆடுங் கிளைமிசை..<br>ஏடு தருங்கதை... |





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பாடநூல் இலக்கணக்குறிப்புகள்

### இயல் - 1

**(i) தமிழோவியம்**

| | |
|---|---|
| எத்தனை எத்தனை, விட்டு விட்டு | - அடுக்குத்தொடர் |
| ஏந்தி | - வினையெச்சம் |
| காலமும் | - முற்றும்மை |

**(ii) தமிழ்விடு தூது**

| | |
|---|---|
| முத்திக்கனி | - உருவகம் |
| தெள்ளமுது | - பண்புத்தொகை |
| குற்றமிலா | - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| நா | - ஓரெழுத்து ஒருமொழி |
| செவிகள் உணவான | - நான்காம் வேற்றுமைத் தொகை |
| சிந்தாமணி | - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

### இயல் - 2

**(I) பட்ட மரம்**

| | |
|---|---|
| வெந்து, வெம்பி, எய்தி | - வினையெச்சங்கள் |
| மூடுபனி | - வினைத்தொகை |
| ஆடுங்கிளை | - பெயரெச்சத்தொடர் |

**(ii) பெரியபுராணம்**

| | |
|---|---|
| கருங்குவளை, செந்நெல் | - பண்புத்தொகைகள் |
| விரிமலர் | - வினைத்தொகை |
| தடவரை | - உரிச்சொல் தொடர் |

**(iii) புறநானூறு**

| | |
|---|---|
| மூதூர், நல்லிசை, புன்புலம் | - பண்புத்தொகைகள் |
| நிறுத்தல் | - தொழிற்பெயர் |
| அமையா | - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| நீரும் நிலமும், உடம்பும் உயிரும் | - எண்ணும்மைகள் |
| அடுபோர் | - வினைத்தொகை |
| கொடுத்தோர் | - வினையாலணையும் பெயர் |

### இயல் - 3

**(i) மணிமேகலை**

| | |
|---|---|
| தோரணவீதியும், தோமறு கோட்டியும் | - எண்ணும்மைகள் |
| காய்க்குலைக் கமுகு, பூக்கொடி வல்லி, முத்துத்தாமம் | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகள் |
| மாற்றுமின், பரப்புமின் | - ஏவல் வினைமுற்றுகள் |
| உறுபொருள் | - உரிச்சொல் தொடர் |
| தாழ்பூந்துறை | - வினைத்தொகை |
| பாங்கறிந்து | - இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| நன்பொருள், தண்மணல், நல்லுரை | - பண்புத்தொகைகள் |

### இயல் - 4

**(I) ஓ, என் சமகாலத் தோழர்களே!**

| | |
|---|---|
| பண்பும் அன்பும், இனமும் மொழியும் | - எண்ணும்மைகள் |
| சொன்னோர் | - வினையாலணையும் பெயர் |

**(ii) உயிர்வகை**

| | |
|---|---|
| உணர்ந்தோர் | - வினையாலணையும் பெயர் |





www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இயல் - 8

**(i) ஒளியின் அழைப்பு**

பிறவிஇருள், ஒளியமுது
வாழ்க்கைப்போர் - உருவகங்கள்

**(ii) தாவோ தே ஜிங்**

பாண்டம் பாண்டமாக - அடுக்குத்தொடர்
வாயிலும் சன்னலும் - எண்ணும்மை

**(ii) யசோதர காவியம்**

ஆக்குக, போக்குக, நோக்குக - வியங்கோள் வினைமுற்றுகள்

## இயல் - 9

**(i) அக்கறை**

உருண்டது, போனது - ஒன்றன்பால் வினைமுற்றுகள்
சரிந்து - வினையெச்சம்
அனைவரும் - முற்றும்மை

**(ii) குறுந்தொகை**

களைஇய - சொல்லிசை அளபெடை
பெருங்கை, மென்சினை - பண்புத்தொகைகள்
பொளிக்கும் - செய்யும் என்னும் வினைமுற்று
பிடிபசி - ஆறாம் வேற்றுமைத்தொகை
அன்பின - பலவின்பால் அஃறிணை வினைமுற்று

# சொல்லும் பொருளும்

## இயல் - 1

**(i) தமிழ்விடு தூது**

குறம், பள்ளு - சிற்றிலக்கிய வகைகள்
மூன்றினம் - துறை, தாழிசை, விருத்தம்
திறமெல்லாம் - சிறப்பெல்லாம்
சிந்தாமணி - சீவகசிந்தாமணி, சிதறாத மணி என்னும் இருபொருளையும் குறிக்கும்.
சிந்து - ஒருவகை இசைப்பாடல்
முக்குணம் - மூன்று குணங்கள் (சமத்துவம், அமைதி, மேன்மை)
இராசசம் - போர்தீவிரமான செயல்களைக் குறிக்கும்.
பத்துக் குணம் - செறிவு, சமநிலை முதலிய பத்துக் குணஅணிகள்.
வண்ணங்கள் ஐந்து - வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை
வண்ணம் நூறு - குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு.
ஊனரசம் - குறையுடைய சுவை
நவரசம் - வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை ஆகிய ஒன்பது சுவை.
வனப்பு - அழகு (அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு)

## இயல் - 2

**(I) பட்ட மரம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குந்த | - | உட்கார | மிசை | - | மேல் |
| கந்தம் | - | மணம் | விசனம் | - | கவலை |

**(ii) பெரியபுராணம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா | - | வண்டு | மேதி | - | எருமை |
| மது | - | தேன் | துதைந்து எழும் | - | கலக்கி எழும் |
| வாவி | - | பொய்கை | கன்னி வாளை | - | இளமையான வாளைமீன் |
| வளர் முதல் | - | நெற்பயிர் | சூடு | - | நெல் அரிக்கட்டு |
| தரளம் | - | முத்து | சுரிவளை | - | சங்கு |
| பணிலம் | - | சங்கு | வேரி | - | தேன் |
| வரம்பு | - | வரப்பு | பகடு | - | எருமைக்கடா |
| கழை | - | கரும்பு | பாண்டில் | - | வட்டம் |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இயல் - 9

**(i) குறுந்தொகை**

| | | | |
|---|---|---|---|
| நசை | - விருப்பம் | யா | - ஒருவகை மரம் (பாலை நிலத்தில் வளர்வது) |
| நல்கல் | - வழங்குதல் | | |
| பிடி | - பெண் யானை | பொளிக்கும் | - உரிக்கும் |
| வேழம் | - ஆண் யானை | ஆறு | - வழி |

## இயல் - 1 தமிழ்விடு தூது

1) **"தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான**
**முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்**
**உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்**
**விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்**
**குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு**
**உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ!"**

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ...............**
   அ) மணிமேகலை ஆ) தமிழ்விடு தூது
   இ) பெரியபுராணம் ஈ) சீவகசிந்தாமணி **விடை: ஆ**
2. **'முத்திக்கனி' இலக்கணக்குறிப்பு ..............**
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) உவமைத்தொகை ஈ) உருவகம் **விடை: ஈ**
3. **முத்தமிழ் - பிரித்து எழுதுக.**
   அ) மு + தமிழ் ஆ) முத்து + தமிழ்
   இ) மூன்று + தமிழ் ஈ) மூ + தமிழ் **விடை: இ**
4. **பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.**
   அ) தித்திக்கும், தெள்அமுதாய் ஆ) விண்ணப்பம், விளம்பக்கேள்
   இ) தித்திக்கும், முத்திக் கனியே ஈ) குறம்என்றும், பள்ளுஎன்றும் **விடை: இ**

## இயல் - 2 i) பட்ட மரம்

2) **"ஓலமி டக்கரம்**
**நீட்டிய போல்இடர்**
**எய்தி உழன்றனையே!**
**பாடும் பறவைகள்**
**கூடி உனக்கொரு**
**பாடல் புனைந்ததுவும்**
**மூடு பனித்திரை**
**யூடு புவிக்கொரு**
**மோகங் கொடுத்ததுவும்**
**ஆடுங் கிளைமிசை**
**ஏறிச் சிறுவர்**
**குதிரை விடுத்ததுவும்**
**ஏடு தருங்கதை**
**யாக முடிந்தன!**
**இன்று வெறுங்கனவே!"**

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ...............**
   அ) மணிமேகலை ஆ) சீவகசிந்தாமணி
   இ) பெரியபுராணம் ஈ) பட்ட மரம் **விடை: ஈ**
2. **இப்பாடலின் ஆசிரியர் ...............**
   அ) கவிஞர் வைரமுத்து ஆ) கல்யாண்ஜி
   இ) லா வோட்சு ஈ) கவிஞர் தமிழ்ஒளி **விடை: ஈ**
3. **மூடுபனி - இலக்கணக்குறிப்பு தருக.**
   அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை **விடை: ஈ**
4. **மிசை, கந்தம் என்பதன் பொருள் ..........**
   அ) மணம், கீழ் ஆ) மேல், மணம்
   இ) மேல், மனம் ஈ) மனம், மணம் **விடை: ஆ**





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பகுதி – II (9x2=18)

## பிரிவு – I (4x2=8)

### 4. விடைக்கேற்ற வினா அமைத்தல்

**மெல்ல மலரும் மொட்டுகளுக்கான வழிமுறைகள்**

1. மெல்ல மலரும் மொட்டுகள் விடைக்கேற்ற வினா எழுதும் பகுதியில் இறுதி எழுத்து மெய்யெழுத்தாக இருந்தால் அதில் உள்ள புள்ளியை நீக்கிவிட்டு துணைக்கால், வினாக்குறி போட்டால் வினா அமைந்துவிடும்.

   சென்றார் - சென்றா**ரா**?
   வேண்டும் - வேண்டு**மா**?
   சென்றாய் - சென்றா**யா**?
   வருவாள் - வருவா**ளா**?

2. உயிர்மெய் எழுத்தில் முடிந்தால் வா (அ) யா என்ற எழுத்துகளைச் சேர்க்க வேண்டும்.

   அடைந்தன – அடைந்தன**வா**?
   தேவை – தேவை**யா**?
   அடைந்தது – அடைந்தது**வா**?

1. **ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.**

   ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கு**மா**?

2. **1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.**

   1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது**வா**?

1. **திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது.**
   திராவிட மொழிகளில் பால்பாகுபாடு எவ்வாறு அமைந்துள்ளது?
2. **1856 இல் கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதினார்.**
   கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதிய ஆண்டு எது?
3. **மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம்.**
   மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் எவை?
4. **பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியைக் கண்மாய் என்று அழைத்தனர்.**
   பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியை எவ்வாறு அழைத்தனர்?
5. **சங்க இலக்கியமான கலித்தொகையில் ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.**
   ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடும் சங்க இலக்கியம் எது?
6. **சல்லிக்கட்டு பேச்சுவழக்கில் திரிபுற்று 'ஜல்லிக்கட்டு' என அழைக்கப்படுகிறது.**
   சல்லிக்கட்டு பேச்சுவழக்கில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
7. **தமிழக மக்கள் பயன்படுத்தும் குடும்ப அட்டைகள் திறன் அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன.**
   தமிழக மக்கள் பயன்படுத்தும் குடும்ப அட்டைகள் எவ்வாறு மாற்றப்பட்டுள்ளன?
8. **1991-இல் இணையம், பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வந்தது.**
   எந்த ஆண்டு இணையம் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வந்தது?
9. **தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி ஆவார்.**
   தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் யார்?
10. **ஈ.வே.ரா. நாகம்மை இலவசக் கல்வி உதவித்திட்டம் பட்டமேற்படிப்பிற்கு உரியது.**
    பட்டமேற்படிப்பிற்கு உரிய இலவசக் கல்வி உதவித்திட்டத்தின் பெயர் என்ன?
11. **ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 5- ஆம் நாள் உலகச் சுற்றுச்சூழல் நாளாகக் கொண்டாடப்படுகிறது.**
    ஒவ்வோர் ஆண்டும் உலகச் சுற்றுச்சூழல் தினம் எந்நாளில் கொண்டாடப்படுகிறது?
12. **அறிவியல் முன்னேற்றத்தால், மனிதனின் பயணநேரம் குறைந்துள்ளது.**
    மனிதனின் பயணநேரம் குறைந்தது எதனால்?
13. **தந்தை பெரியார் 'தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' என்றழைக்கப்படுகிறார்.**
    தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ் என்றழைக்கப்படுபவர் யார்?



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



14. **கல்வி பெறுதலே பெண்களுக்கு அழகு.**
    பெண்களுக்கு அழகு எது?
15. **ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.**
    ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டவை எவை?
16. **1942 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் நாள், ஆங்கிலேயப் படைகள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைந்தன.**
    ஆங்கிலேய படைகள் எங்கு, எப்பொழுது ஜப்பானியரிடம் சரணடைந்தன?
17. **பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோவில்களில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன.**
    பாண்டியர் கால குகைக்கோயில்களின் சிறப்பு என்ன?
18. **உலக நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டுவது நம் இயல்பு.**
    இந்தியரின் இயல்பு எது?
19. **அக்காலத்தில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் ஒடுக்கப்பட்டிருந்தனர்.**
    அக்கால பெண்களின் நிலை என்ன?
20. **சமூக வளர்ச்சிக்குக் கல்வியை மிகச்சிறந்த கருவியாகப் பெரியார் கருதினார்.**
    சமூக வளர்ச்சிக்குரிய கருவியாகப் பெரியார் எதைக் கருதினார்?

## 5. செய்யுள், உரைநடை குறுவினாக்கள்

**இயல் - 1** (பா.நூ.ப.எண்: 26)

1. **நீங்கள் பேசும் மொழி எந்த மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது?**
   நாங்கள் பேசும் தமிழ்மொழி திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது.
2. **தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.**

   விரலை மடக்கியவன் இசையில்லை - எழில்
   வீணையில் என்று சொல்வதுபோல்
   குறைகள் சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்
   கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்!

   - என்னும் அடிகளில் உள்ள உவமைநயம் என்னை மிகவும் கவர்ந்தது. சாதனையாளனுக்குச் சருகும் ஆயுதமே என்பதை இவ்வடிகள் உணர்த்துகின்றன.
3. **கண்ணி என்பதன் விளக்கம் யாது?**
   - இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.
   - அதேபோல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும். (சான்று : தமிழ்விடு தூது)
4. **கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களை எழுதுக.**
   - சாப்ட்வேர் - மென்பொருள்
   - கர்சர் - சுட்டி
   - மானிட்டர் - காட்சித்திரை
   - லேப்டாப் - மடிக்கணினி
   - கீபோர்டு - விசைப்பலகை
5. **அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்.**
   **- இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?**
   - தமிழர்களின் வாழ்க்கைமுறை அகம், புறம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது.
   - இவ்வாழ்க்கை முறைகளைப் பாடுபொருளாகக் கொண்ட பல்வேறு இலக்கண, இலக்கியங்கள் தமிழில் உள்ளன என்பதை இவ்வடிகள் உணர்த்துகின்றன.

**இயல் - 2** (பா.நூ.ப.எண்: 56)

6. **"கூவல்" என்று அழைக்கப்படுவது எது?**
   உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலைக்குக் கூவல் என்று பெயர்.
7. **உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களை எழுதுக.**
   குளம், ஏரி, குட்டை, ஓடை, கிணறு, ஊருணி
8. **உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்புத் தருக.**
   - உண்டி – உணவு
   - உலகில் உயிர்வாழ அடிப்படைத்தேவை உணவு. அவ்வுணவைத் தந்தவர் உயிரைத் தந்தவராகக் கருதப்படுவார் என்கிறது புறநானூறு.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

### இயல் - 1

**1. இந்திய மொழிக்குடும்பங்கள் எவையெவை?**

இந்தியாவில் 1300க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றை நான்கு மொழிக்குடும்பங்களாகப் பிரிப்பர்.

- இந்தோ - ஆசிய மொழிகள்
- ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
- திராவிட மொழிகள்
- சீன - திபெத்திய மொழிகள்

**2. இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை எனக்கூறியவர் யார்? ஏன்?**

- இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை எனக்கூறியவர் ச.அகத்தியலிங்கம்.
- இங்கு 1300க்கும் மேற்பட்ட மொழிகளும், பல கிளைமொழிகளும் பேசப்படுவதால் மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது.

**3. திராவிட மொழிகளின் பழமையான இலக்கிய - இலக்கணங்களைக் குறிப்பிடுக.**

| திராவிட மொழிகள் | இலக்கியம் | இலக்கணம் |
|---|---|---|
| ➢ தமிழ் | சங்க இலக்கியம் | தொல்காப்பியம் |
| ➢ கன்னடம் | கவிராஜ மார்க்கம் | கவிராஜ மார்க்கம் |
| ➢ தெலுங்கு | பாரதம் | ஆந்திர பாஷா பூஷணம் |
| ➢ மலையாளம் | ராம சரிதம் | லீலா திலகம் |

**4. புதுக்கவிதையின் புதுப்புது வடிவங்கள் யாவை?**

- ஹைக்கூ - 3 அடிகளில் இலக்கணமில்லாமல் பாடப்படுவது.
- சென்ரியு - 3 அடிகளில் நகைச்சுவையுடன் பாடப்படுவது.
- லிமரைக்கூ - 3 அடிகளில் இயைபுத்தொடையுடன் பாடப்படுவது.

**5. தூது - குறிப்புத் தருக.**

- 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- அன்னம், வண்டு ஆகியவற்றைத் தூது அனுப்புவதாகப் பாடப்பெறும்.
- கலிவெண்பாவில் இயற்றப்படுவது.
- சிறந்த நூல் தமிழ்விடு தூது.
- 268 கண்ணிகளைக் கொண்டது.

### இயல் - 2

**6. ஜான் பென்னி குவிக் பற்றி எழுதுக.**

தமிழகத்தின் தென்மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகியவற்றின் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் உதவும் முல்லை பெரியாறு அணையைக் கட்டியவர் ஜான் பென்னி குவிக் ஆவார்.

**7. சேக்கிழாரின் பெரியபுராணம் எந்த இரு நூல்களை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டது?**

- சுந்தரரின் திருத்தொண்டத் தொகை.
- நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி.

**8. பொதுவியல் திணை என்றால் என்ன?**

வெட்சி முதலிய புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளையும் கூறப்படாத செய்திகளையும் கூறுவது பொதுவியல் திணை. "நீர்இன்று அமையா...." என்னும் புறநானூற்றுப் பாடல் பொதுவியல் திணையைச் சேர்ந்தது.

**9. முதுமொழிக்காஞ்சித் துறை என்றால் என்ன?**

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளின் உறுதி தரும் தன்மையைக் கூறுவது முதுமொழிக்காஞ்சித் துறையாகும்.

**10. சேக்கிழாரை மீனாட்சி சுந்தரனார் எவ்வாறு பாராட்டுகிறார்?**

"பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என்று சேக்கிழாரை மீனாட்சி சுந்தரனார் பாராட்டுகிறார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## பிரிவு-2 (5x2=10)

# 6. இலக்கண வினாக்கள்

## இயல் - 1

**1. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

| துணைவினை | செய்வினை | செயப்பாட்டு வினை |
|---|---|---|
| படு | கமலி பாடினாள். | கமலியால் பாடப்பட்டது. |
| உண் | இராமன் இராவணனைக் கொன்றான். | இராமனால் இராவணன் கொலையுண்டான் |

**2. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.**

வீணையோடு வந்தாள் - வேற்றுமைத் தொடர்
கிளியே பேசு - விளித்தொடர்

## இயல் - 6

**3. இடிகுரல், பெருங்கடல் - இலக்கணக்குறிப்புத் தருக.**

இடிகுரல் - உவமைத்தொகை பெருங்கடல் - பண்புத்தொகை

## இயல் - 8

**4. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

அசை இரண்டு வகைப்படும். அவை, 1. நேரசை, 2. நிரையசை

## இயல் - 9

**5. பிடிபசி களைஇய பெருங்கை வேழம் - இவ்வடியில் உள்ள இலக்கணக்குறிப்புகளைக் கண்டறிக.**

- பிடிபசி - ஆறாம் வேற்றுமைத் தொகை
- களைஇய - சொல்லிசை அளபெடை
- பெருங்கை - பண்புத்தொகை

**6. நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன் - இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.**

கவித்தேன் - தேன் கவி
சுவைத்தேன் - தேன் சுவை
} உருவகங்கள்

## கூடுதல் வினாக்கள்

## இயல் - 1

**1. எழுவாய், பயனிலை விளக்குக.**

- ஒரு சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லையே எழுவாய் என்கிறோம்.
- ஒரு தொடரில் பயன் நிலைத்து நிற்கும் இடத்தைப் பயனிலை என்கிறோம்
- இராமன் வென்றான். இராமன் - எழுவாய்; வென்றான் - பயனிலை.

**2. பகுபதம் என்றால் என்ன? அதன் உறுப்புகள் யாவை?**

பிரிக்கக்கூடியதும் பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும். இதன் உறுப்புகள் ஆறு. அவை,

- எழுத்து
- அசை
- சீர்
- தளை
- அடி
- தொடை

**3. எழுத்துப்பேறு - விளக்குக.**

பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும்.





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**33. சினையாகுபெயர் என்றால் என்ன? விளக்குக.**

ஒரு சினைப்பொருளின் பெயர் அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது சினையாகுபெயர் எனப்படும்.

எ.கா: மருக்கொழுந்து நட்டான். மருக்கொழுந்து என்னும் சினை(உறுப்பு) பெயர், அதன் செடிக்கு ஆகி வந்தது.

**34. கருத்தாவாகுபெயர் என்றால் என்ன? விளக்குக.**

ஒரு கருத்தாவின் பெயர் அக்கருத்தாவால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது கருத்தாவாகு பெயர் எனப்படும்.

எ.கா: அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன். அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது.

## இயல் - 8

**35. யாப்பின் உறுப்புகள் யாவை?**

யாப்பின் உறுப்புகள் அறுவகைப்படும். அவை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியனவாகும்.

**36. யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

மூன்று வகைப்படும். அவை குறில், நெடில், ஒற்று ஆகியனவாகும்.

## இயல் - 9

**37. அணி என்றால் என்ன? அணி இலக்கண இயல்பு யாது?**

- செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது அணி எனப்படும்.
- சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது அணி இலக்கண இயல்பாகும்.

**38. இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக**
**வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி**
**அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்**
**பைங்கூழ் சிறுகாலைச் செய் - இப்பாடலில் பயின்று வரும் அணி யாது? விளக்குக.**

- உருவக அணி.
- இன்சொல் - நிலமாகவும், வன்சொல் - களையாகவும், வாய்மை - எருவாகவும், அன்பு - நீராகவும், அறம் - கதிராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

# 7. கற்பவை கற்றபின், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு

## இயல் - 1

(பா.நூ.ப.எண்: 23-29)

**1. தொடர்களை மாற்றி உருவாக்குக.**

**அ) பதவியை விட்டு நீக்கினான் - இத்தொடரைப் தன்வினைத் தொடராக மாற்றுக.**

பதவியை விட்டு நீங்கினான்.

**ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர் - இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக.**

மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்.

**இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே - இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.**

உண்ணும் தமிழ்த்தேனே.

**ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக்குடும்பங்களாகப் பகுத்துள்ளனர் - இத்தொடரை செயப்பாட்டு வினைத்தொடராக மாற்றுக.**

திராவிட மொழிகள் மூன்று மொழிக்குடும்பங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

**உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார் - இத்தொடரை பிறவினைத் தொடராக மாற்றுக.**

நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பித்தார்.



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**89. பொருத்தமான தமிழ் எண்களைக் கொண்டு நிரப்புக.**

**தமிழிலுள்ள மொத்த எழுத்துகள் ------------ ஆகும். இவை முதலெழுத்து, சார்பெழுத்து என்று ------------ பிரிவாகப் பிரிக்கப்படும். ------------ உயிரெழுத்துகள், ------------ மெய்யெழுத்துகள் ஆகிய ------------ எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும். இவற்றைச் சார்ந்து பிறப்பவை சார்பெழுத்துகள் என்றழைக்கப்படுகின்றன; சார்பெழுத்துகள் ------------ வகைப்படும்.**

**விடை:**

தமிழிலுள்ள மொத்த எழுத்துகள் உசஎ (247) ஆகும். இவை முதலெழுத்து, சார்பெழுத்து என்று உ (2) பிரிவாகப் பிரிக்கப்படும். கஉ (12) உயிரெழுத்துகள், கஅ (18) மெய்யெழுத்துகள் ஆகிய ௩0 (30) எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும். இவற்றைச் சார்ந்து பிறப்பவை சார்பெழுத்துகள் என்றழைக்கப்படுகின்றன; சார்பெழுத்துகள் க0 (10) வகைப்படும்.

## 8. கலைச்சொற்களைத் தமிழாக்கம் செய்தல்

| இயல் - 1 | | |
|---|---|---|
| வ.எண் | ENGLISH | தமிழ் |
| 1 | Linguistics | மொழியியல் |
| 2 | Literature | இலக்கியம் |
| 3 | Philologist | மொழிப்புலமையாளர் |
| 4 | Polyglot | பன்மொழியாளர் |
| 5 | Phonologist | ஒலியியல் நிபுணர் |
| 6 | Phonetics | ஒலிப்பியல் |
| 7 | Morpheme | உருபன் |
| 8 | Phoneme | ஒலியன் |
| 9 | Comparative Grammar | ஒப்பிலக்கணம் |
| 10 | Lexicon | பேரகராதி |
| இயல் - 2 | | |
| 11 | Conical Stone | குமிழிக் கல் |
| 12 | Water Management | நீர் மேலாண்மை |
| 13 | Irrigation Technology | பாசனத் தொழில்நுட்பம் |
| 14 | Tropical Zone | வெப்ப மண்டலம் |
| இயல் - 3 | | |
| 15 | Excavation | அகழாய்வு |
| 16 | Epigraphy | கல்வெட்டியல் |
| 17 | Hero Stone | நடுகல் |
| 18 | Cultural Symbol | பண்பாட்டுக் குறியீடு |
| 19 | Empossed Sculpture | புடைப்புச் சிற்பம் |
| 20 | Inscription | பொறிப்பு |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## 9. அகராதியில் பொருள் காணுதல்

### இயல் - 1

1) நயவாமை - விரும்பாமை
2) கிளத்தல் - புலப்படக் கூறுதல்
3) கேழ்பு - நன்மை
4) செம்மல் - வாடாப்பூ, இறைவன்
5) புரிசை - மதில்

### இயல் - 2

6) கந்தி - கந்தகம், கமுகு
7) நெடில் - நெட்டெழுத்து, மூங்கில்
8) பாலி - ஆலமரம்
9) மகி - பூமி, பசு
10) கம்புள் - சங்கு
11) கைச்சாத்து - கையெழுத்து

### இயல் - 3

12) இயவை - வழி, காடு
13) சந்தப்பேழை - சந்தனப்பெட்டி
14) சிட்டம் - நீதி, பெருமை
15) தகழ்வு - வீண் ஆடம்பரம்
16) பௌரி - பெரும் பண்வகை

### இயல் - 4

17) இமிழ்தல் - ஒலித்தல்
18) இசைவு - ஒப்புதல்
19) துவனம் - ஒலி
20) சபலை - மின்னல்
21) துகலம் - நுட்பமான ஒலி

### இயல் - 5

22) அரங்கு - அரங்கம்
23) ஒட்பம் - அறிவு, மேன்மை
24) கான் - காடு
25) நசை - விருப்பம்
26) பொருநர் - பகைவர், கூத்தர்

### இயல் - 6

27) ஏங்கல் - அழுதல், இரங்கல்
28) கிடுகு - முடைந்த, ஓலைக்கீற்று
29) தாமம் - பூமாலை, யானை
30) பான்மை - குணம், முறைமை, தகுதி
31) பொறி - உறுப்பு, தீப்பொறி, இயந்திரம்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| | |
|---|---|
| என், ஏன் | தன்மை ஒருமை வினைமுற்று விகுதி |
| அம், ஆம், எம், ஏம், ஓம் | தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி |
| ஐ, ஆய், இ | முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி |
| இர்,ஈர் | முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி |
| அ, உம் | பெயரெச்ச விகுதி |
| உ, இ | வினையெச்ச விகுதி |
| க, இய, இயர் | வியங்கோள் வினைமுற்று விகுதி |
| தல், அல், ஐ, கை, சி, பு | தொழிற்பெயர் விகுதி |

## இயல் - 1

1) வளர்ப்பாய் - வளர் + ப் + ப் + ஆய்
வளர் - பகுதி
ப் - சந்தி
ப் - எதிர்கால இடைநிலை
ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

2) கொள்வார் - கொள் + வ் + ஆர்
கொள் - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

3) உணர்ந்த - உணர் + த்(ந்) + த் + அ
உணர் - பகுதி
த் - சந்தி (த்-ந் ஆனது விகாரம்)
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

## இயல் - 2

4) விரித்த - விரி + த் + த் + அ
விரி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

5) குமைந்தனை - குமை + த்(ந்) + த் + அன் + ஐ
குமை - பகுதி
த் - சந்தி (த்-ந் ஆனது விகாரம்)
த் - இறந்தகால இடைநிலை
அன் - சாரியை
ஐ - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

6) பாய்வன - பாய் + வ் + அன் + அ
பாய் - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
அன் - சாரியை
அ - பலவின்பால் வினைமுற்று விகுதி

7) நிறுத்தல் - நிறு + த் + தல்
நிறு - பகுதி
த் - சந்தி
தல் - தொழிற்பெயர் விகுதி





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



8. **விதையொன்று போடச்** சுரையொன்று முளைக்காது.
9. **நாமொன்று நினைக்க** தெய்வம் ஒன்று நினைக்கும்.
10. **கெடுவான் கேடு** நினைப்பான்.
11. **அளவுக்கு மீறினால்** அமுதமும் நஞ்சு.
12. **சுடர் விளக்காயினும்** தூண்டுகோல் வேண்டும்.
13. **சிறுதுரும்பும்** பல் குத்த உதவும்.
14. **புலி பசித்தாலும்** புல்லைத் தின்னாது.
15. **காக்கைக்குத் தன் குஞ்சு** பொன்குஞ்சு.
16. **அகத்தின் அழகு** முகத்தில் தெரியும்.
17. **விளையும் பயிர்** முளையிலே தெரியும்.

**2) பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்தல்:**

1. அனுகூலன் - உதவுபவன் (நன்மை செய்பவன்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | இரதம் | - தேர் | 30. | வாலிபர் | - இளைஞர் |
| 3. | ஜனம் | - மக்கள் | 31. | சரித்திரம் | - வரலாறு |
| 4. | செனிக்கும் | - பிறக்கும் | 32. | உபகாரம் | - உதவி |
| 5. | சுகாதாரம் | - நலவாழ்வு | 33. | பிரபந்தம் | - நூல் |
| 6. | தேசம் | - நாடு | 34. | மந்திரி | - அமைச்சர் |
| 7. | அனுபவம் | - பட்டறிவு | 35. | மகாராஜா | - மாமன்னர் |
| 8. | ஆவேசம் | - கோபம் | 36. | சாதுரியம் | - அறிவுத்திறன் |
| 9. | பாக்கியசாலி | - நற்பேறு பெற்றவர் | 37. | உத்தரவு | - ஆணை |
| 10. | தாதியர் | - செவிலியர் | 38. | கரங்கள் | - கைகள் |
| 11. | சேவை | - தொண்டு | 39. | பிரதிநிதி | - உறுப்பினர் |
| 12. | விஞ்ஞானம் | - அறிவியல் | 40. | கோர்ட் | - நீதிமன்றம் |
| 13. | பரீட்சை | - தேர்வு | 41. | கிரிமினல் | - குற்றவியல் |
| 14. | பௌதிகம் | - இயற்பியல் | 42. | ஞாபகார்த்தம் | - நினைவுச்சின்னம் |
| 15. | நியதி | - வரையறை | 43. | அபிஷேகம் | - திருமுழுக்கு |
| 16. | ஆஸ்தி | - சொத்து | 44. | ஸ்நானம் | - குளியல் |
| 17. | விஷயம் | - செய்தி | 45. | காலேஜ் | - கல்லூரி |
| 18. | ஹாஸ்டல் | - விடுதி | 46. | ரிசர்வ் | - முன்பதிவு |
| 19. | அபூர்வம் | - அரிது | 47. | ஜாக்கிரதை | - விழிப்பு |
| 20. | சாதம் | - சோறு | 48. | சுபதினம் | - நன்னாள் |
| 21. | சிபாரிசு | - பரிந்துரை | 49. | கிரியை | - சடங்கு |
| 22. | இலட்சணம் | - அழகு | 50. | பிரசங்கம் | - சொற்பொழிவு |
| 23. | மத்தியானம் | - நண்பகல் | 51. | பௌர்ணமி | - முழுநிலா |
| 24. | ஹோட்டல் | - உணவு விடுதி | 52. | சபாநாயகர் | - அவைத்தலைவர் |
| 25. | ஸ்திரீகள் | - பெண்கள் | 53. | முகூர்த்தம் | - நேரம், நாழிகை |
| 26. | ஆஸ்பத்திரி | - மருத்துவமனை | 54. | அநுக்கிரகம் | - அருள் |
| 27. | விவாகம் | - திருமணம் | 55. | தம்பதிகள் | - மணமக்கள் |
| 28. | பங்க் கடை | - பெட்டிக்கடை | 56. | மந்திரி | - அமைச்சர் |
| 29. | டிக்கெட் | - பயணச் சீட்டு | 57. | பஸ் ஸ்டாப் | - பேருந்து நிறுத்தம் |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - III (6 x 3 = 18)

### பிரிவு-1 (2X3=6)

### 11.உரைநடை சிறுவினாக்கள்

**இயல் - 1 திராவிட மொழிக்குடும்பம்** **(பா.நூ.ப.எண்:26)**

1. **திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

திராவிட மொழிகள் பரவிய நில அடிப்படையில்,

- தென் திராவிட மொழிகள்
- நடுத்திராவிட மொழிகள்
- வடதிராவிட மொழிகள்

என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

சிறப்பியல்புகள்:

- உயிரற்றப் பொருள்களுக்கும் பால்பாகுபாடு அமைந்துள்ள பெருமை திராவிட மொழிகளுக்கே உண்டு.
- திணை, பால், எண், இடம் ஆகியவற்றை வினைமுற்றுச் சொல்லிலிருந்து அறிந்து கொள்ள முடியும். பிற மொழிகளில் அவ்வாறு இல்லை.
- பொதுப்பண்புகளைப் பெற்றிருந்தாலும் அவைகளுள்ளும் சிறப்புடையது தமிழ்மொழி. தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது.
- பிற மொழிகளின் தாக்கம் குறைவாக உள்ளது தமிழ்மொழி.

2. **மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?**

- தமிழ் - மூன்று
- மலையாளம் - மூணு
- தெலுங்கு - மூடு
- கன்னடம் - மூரு
- துளு - மூஜி

எண்ணுப்பெயர்கள் திராவிட மொழிகளில் ஒன்று போலவே அமைந்துள்ளன.

**இயல் - 2 நீரின்றி அமையாது உலகு** **(பா.நூ.ப.எண்:57)**

3. **அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.**

- உலகின் பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கு அடிப்படைத் தேவையாக உள்ள தண்ணீரைப் பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.
- நம் முன்னோர் கண்டுணர்ந்த மரபார்ந்த அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- குளம், ஏரி, கால்வாய், கிணறு போன்ற நீர்நிலைகளின் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்க வேண்டும்.
- நிலத்தடி நீரைச் சேமிக்க வேண்டும். அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும்.
- மழை நீர் சேமிப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- இயற்கையின் கொடைகள் கணக்கிலடங்காதவை. அவற்றைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குத் தருவது நமது பொறுப்பு.

**"நீர் சேமிப்பு, உயிர் சேமிப்பு"**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**18. கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.**

- மனிதன், தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும். பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் பாடுபடக்கூடிய வகையில் தன் ஆளுமையை விரிவடையச் செய்து செழுமைப்படுத்த வேண்டும்.
- ஒருவன் பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறானோ அதை அறிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவனாக இருத்தல் வேண்டும்.
- அவனது வாழ்க்கைக்குத் தன் ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும்.

## 12. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல்.

### இயல் - 1 (பா.நூ.ப.எண்:6)

**1. தொன்மையும் இலக்கண இலக்கியவளமும் உடையது தமிழ்மொழியாகும். இலங்கை, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பிஜித்தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென்ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் பேசப்படும் மொழி தமிழ்மொழி. திராவிட மொழிகளுள் பிறமொழித்தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.**

**வினாக்கள்:**

**அ) தமிழ்மொழி எந்தெந்த நாடுகளில் பேசப்படுகிறது?**

**ஆ) தமிழ்மொழியின் சிறப்பு யாது?**

**இ) திராவிட மொழிகளுள் தமிழ்மொழியின் தனிச்சிறப்பு யாது?**

**விடைகள்:**

அ) இலங்கை, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பிஜித்தீவு.

ஆ) தொன்மையும் இலக்கண, இலக்கியவளமும் உடையது தமிழ்மொழி.

இ) திராவிட மொழிகளுள் பிறமொழித்தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.

### இயல் - 2 (பா.நூ.ப.எண்:32)

**2. இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு. உயர்ந்தோங்கிய மலைகள், காடுகள், பசுமைப் புல்வெளிகள், நீர்நிலைகள், வயல்வெளிகள், பசுமையான தோப்புகள் என இயற்கையின் கொடைகள் கணக்கிலடங்காதவை. அவற்றை உரிய வகையில் பயன்படுத்தியும் பாதுகாத்தும் அடுத்த தலைமுறைக்கு அளிப்பது நமது பொறுப்பு. எனவே நீர் மேலாண்மையின் தேவையை உணர்ந்தே ஆகவேண்டிய காலகட்டம் இது.**

**வினாக்கள்:**

**அ) உயிர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு எது?**

**ஆ) இயற்கையின் கொடைகள் யாவை?**

**இ) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.**

**விடைகள்:**

அ) இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு.

ஆ) மலைகள், காடுகள், புல்வெளிகள், நீர்நிலைகள், வயல்வெளிகள், தோப்புகள்.

இ) இயற்கைப் பாதுகாப்பு.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**வினாக்கள்:**

அ) **ஐவகை நிலங்களின் பெயர்களை விரித்து எழுதுக.**
ஆ) **பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
இ) **வையம்-பொருள் தருக.**

**விடைகள்:**

அ) ஐந்து + வகை + நிலங்கள்

1. குறிஞ்சி 2. முல்லை 3. மருதம் 4. நெய்தல் 5. பாலை

ஆ) பொழுது இருவகைப்படும் அவை, 1. சிறுபொழுது, 2. பெரும்பொழுது

இ) உலகம்.

பிரிவு-2 (2x3=6)

## 13. செய்யுள் சிறுவினாக்கள்

### இயல் - 1 தமிழோவியம் (பா.நூ.ப.எண்:26)

**1. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?**

- தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகத் தமிழ்மொழி விளங்குகிறது.
- தமிழில் இல்லாத பிறமொழிச் சொற்களுக்குக் கலைச்சொல்லாக்கம் சிறந்த மாற்றாகக் கருதப்படுகிறது.
- காலத்திற்கேற்ப தன்னைத் தகவமைத்துக்கொள்ளும் மொழியாகத் தமிழ்மொழி திகழ்கிறது. புதுமைகளை ஏற்கிறது.
- இணையத்திலும் தமிழ்மொழி கோலோச்சி வருகிறது.
- தமிழ் நூல்கள் பலவும் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன.
- மேலைநாட்டு கவிதை வடிவங்களான ஹைக்கூ, லிமரைக்கூ, சென்ரியு ஆகியவற்றைத் தமிழ்மொழி ஏற்றுக்கொண்டுள்ளது.

**2. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்கினைச் குறிப்பிடுக.**

**தமிழ் வளர்ப்பதில் என் கடமை:**

- எளிய நடையில் புதுப்புது நூல்களை இயற்றுவேன்.
- புதுக்கவிதைகள் மூலமாக மொழிப்பற்றை வளர்ப்பேன்.
- பிறமொழிக் கருத்துகளும் தமிழ்வடிவம் பெற மொழிபெயர்ப்பு செய்வேன்.
- இன்றைய அவசர யுகத்தில் நூலகத்தில் உள்ள நூல்களை இணையத்தில் ஏற்றினால் மட்டுமே மக்கள் அறிவார்கள். அதற்காகப் பாடுபடுவேன்.
- பிறமொழிக் கலப்பைத் தவிர்ப்பேன்.
- அனைத்துத் துறை சார்ந்த நூல்களையும் தமிழ் வடிவப்படுத்துவேன்.

**"தமிழிலாப் பிறமொழி நூல் அனைத்தும் - நல்ல**
**தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்."**

### இயல் - 2 பட்ட மரம், பெரியபுராணம் (பா.நூ.ப.எண்:57)

**3. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?**

- உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும்.
- நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்த்தவர், இவ்வுலகில் உடலையும் உயிரையும் ஒன்று சேர்த்தவராகக் கருதப்படுவார்.
- ஆகவே நிலம் குழிந்த இடங்கள்தோறும் நீர் நிலைகளைப் பெருகச் செய்தல் வேண்டும்.
- அவ்வாறு நீர்ப்பாதுகாப்பை உண்டாக்குபவரே நிலைத்த புகழைப் பெறுவர் என்று குடபுலவியனார் கூறுகிறார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**7. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?**

தொல்காப்பியர் உயிரினங்களை, அவை பெற்றிருக்கும் அறிவைக் கொண்டு ஆறுவகைப் படுத்துகிறார்.

| அறிவுநிலை | அறியும் ஆற்றல் | உயிரினங்கள் |
|---|---|---|
| ஓரறிவுயிர் | உற்றறிதல் (தொடுஉணர்வு) | புல், மரம் |
| ஈரறிவுயிர் | உற்றறிதல் + சுவைத்தல் | சிப்பி, நத்தை |
| மூவறிவுயிர் | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் | கரையான், எறும்பு |
| நான்கறிவுயிர் | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் | நண்டு, தும்பி |
| ஐந்தறிவுயிர் | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் | பறவை, விலங்கு |
| ஆறறிவுயிர் | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் + பகுத்தறிதல் | மனிதன் |

## இயல் - 5 குடும்ப விளக்கு, சிறுபஞ்சமூலம் (பா.நூ.ப.எண்:145)

**8. "சமைப்பது தாழ்வா? இன்பம் சமைக்கின்றார் சமையல் செய்வார்?"**

**அ) இன்பம் சமைப்பவர் யார்? ஆ) பாவேந்தர் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?**

அ) உணவு சமைப்பவரே இன்பம் சமைப்பவர். சமைப்பதை தாழ்வென எண்ணாமல் அன்புடனே உணவை உருவாக்குபவரே (பெண்கள்) இன்பத்தையும் உருவாக்குகிறார்.

ஆ) உணவை ஆக்குவது உயிரை உருவாக்குவது போன்றதாகும். பொருட்செல்வம் மட்டுமே வாழ்வாகாது. சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு, அருகில் அமர்ந்து அன்பு உள்ளத்தோடு உணவிடுதலிலே நம் வாழ்வு சிறக்கிறது. ஆகவே சமைப்பது தாழ்வாகாது.

**9. விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின் வழி சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.**

- பூக்காமலே காய்க்கும் மரங்களைப் போல, நன்மை தீமைகளை நன்குணர்ந்தவர் இளம் வயதினராக இருந்தாலும் மூத்தவராகவே கருதப்படுவார்.
- விதைக்காமலே முளைக்கும் விதைகளைப்போல பிறர் உணர்த்தாமலே தாமே உணரும் மேதைகளும் உள்ளனர் என்பதையே சிறுபஞ்சமூலம் விளக்குகிறது.

## இயல் - 6 இராவண காவியம், நாச்சியார் திருமொழி, திருக்குறள் (பா.நூ.ப.எண்:172)

**10. இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.**

- முதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகியவற்றை முல்லை நில மக்கள் அறுத்துக் கதிரடித்துக் களத்தில் **குன்று போலக்** குவித்து வைத்திருப்பர்.
- தும்பியானது தரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலர்த்தும்.
- தும்பியானது தாமரையொத்த பெண்களின் முகத்தினை நோக்கித் தொடர்ந்து செல்லும். அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் உள்ளது.

**11. ஆண்டாளின் கனவுக்காட்சிகளை எழுதுக.**

- ஆடும் இளம்பெண்கள், கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கின்றார்கள்.
- வடமதுரையை ஆளும் மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்துகொண்டு புவிஅதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்.
- மத்தளம் முதலான இசைக்கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர்.
- அத்தை மகனும் மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ், ஆண்டாளைத் திருமணம் செய்து கொள்கிறான்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பிரிவு-3 (2X3=6)

## 14. இலக்கண, துணைப்பாட சிறுவினாக்கள்

### இயல் - 1 தொடர் இலக்கணம், வளரும் செல்வம் (பா.நூ.ப.எண்:26)

**1. சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?**

| தமிழ்ச்சொல் | கிரேக்க மொழி |
|---|---|
| எறிதிரை | - எறுதிரான் |
| கலன் | - கலயுகோய் |
| நீர் | - நீரியோஸ், நீரிய |
| நாவாய் | - நாயு |
| தோணி | - தோணீஸ் |

கடலைச் சார்ந்த பெரிய புலம் என்பதே கிரேக்க மொழியில் 'எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ்' என்று நூலின் பெயராக உள்ளது.

**2. வளரும் செல்வம் உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச் சொற்களைத் தொகுத்து அவற்றிக்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பட்டியலிடுக.**

**ஆங்கிலம்:**

| | |
|---|---|
| சாப்ட்வேர் (Software) | - மென்பொருள் |
| ப்ரௌசர் | - உலவி |
| க்ராப் | - செதுக்கி |
| கர்சர் | - ஏவி |
| சர்வர் | - வையக விரிவு வலை வழங்கி |
| ∴போல்டர் | - உறை |
| லேப்டாப் | - மடிக்கணினி |

**கிரேக்கம்:**

| | |
|---|---|
| எறிதிரான் | - எறிதிரை (அலை) |
| நீரியோஸ் | - நீர் |
| கலயுகோய் | - கலன் |

**3. தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.**

**தன்வினை:**

எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும்.

**சான்று:** கண்ணன் பந்தை உருட்டினான்

**பிறவினை:**

எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது பிறவினை எனப்படும்.

**சான்று:** கண்ணன் பந்தை உருட்ட வைத்தான்.

**குறிப்பு:** வி, பி போன்ற விகுதிகளைப் பெற்றும் செய், வை, பண்ணு போன்ற துணை வினைகளைப் பெற்றும் பிறவினைகள் உருவாகின்றன.

### இயல் - 3 அகழாய்வுகள் (பா.நூ.ப.எண்:82)

**4. வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்து உங்கள் கருத்துகளைத் தொகுத்துரைக்க.**

**அகழாய்வின் தேவை:**

- அகழாய்வு என்பது அறிவியலை அடிப்படையாகக் கொண்டது.
- பழமையின் பட்டையை உரித்துக் கொண்டுதான் புதுமை பிறக்கிறது.
- நிகழ்காலத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ள கடந்த காலத்தை ஆராய்வதே சிறந்தது.





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. **திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | 2 1 1<br>திற\|னல்\|ல | நிரை + நேர் + நேர் | புளிமாங்காய் |
| 2 | 1 2<br>தற்\|பிறர் | நேர் + நிரை | கூவிளம் |
| 3 | 1 2<br>செய்\|யினும் | நேர் + நிரை | கூவிளம் |
| 4 | 1 1 1<br>நோ\|நொந்\|து | நேர் + நேர் + நேர் | தேமாங்காய் |
| 5 | 2 1 1<br>அற\|னல்\|ல | நிரை + நேர் + நேர் | புளிமாங்காய் |
| 6 | 1 1 1<br>செய்\|யா\|மை | நேர் + நேர் + நேர் | தேமாங்காய் |
| 7 | 1 1<br>நன்\|று | நேர்பு (நேர்+ நேர்) | காசு |
| | இக்குறள் 'காசு' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது. | | |

3. **மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | மிகு\|தியான் | நிரை + நிரை | கருவிளம் |
| 2 | மிக்\|கவை | நேர் + நிரை | கூவிளம் |
| 3 | செய்\|தா\|ரைத் | நேர் + நேர் + நேர் | தேமாங்காய் |
| 4 | தாம்\|தம் | நேர் + நேர் | தேமா |
| 5 | தகு\|தியான் | நிரை + நிரை | கருவிளம் |
| 6 | வென்\|று | நேர் + நேர் | தேமா |
| 7 | விடல் | நிரை | மலர் |
| | இக்குறள் 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது. | | |

4. **தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | தீ\|யவை | நேர் + நிரை | கூவிளம் |
| 2 | தீ\|ய | நேர் + நேர் | தேமா |
| 3 | பயத்\|தலால் | நிரை + நிரை | கருவிளம் |
| 4 | தீ\|யவை | நேர் + நிரை | கூவிளம் |
| 5 | தீ\|யினும் | நேர் + நிரை | கூவிளம் |
| 6 | அஞ்\|சப் | நேர் + நேர் | தேமா |
| 7 | படும் | நிரை | மலர் |
| | இக்குறள் 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது. | | |



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**நாலசைச்சீர் (தண்பூ4, நறும்பூ4, தண்ணிழல்4, நறுநிழல்4)**

1) நேர் நேர் நேர் நேர் - தேமாந்தண்பூ
2) நிரை நேர் நேர் நேர் - புளிமாந்தண்பூ
3) நேர் நிரை நேர் நேர் - கூவிளந்தண்பூ
4) நிரை நிரை நேர் நேர் - கருவிளந்தண்பூ
5) நேர் நேர் நிரை நேர் - தேமாநறும்பூ
6) நிரை நேர் நிரை நேர் - புளிமாநறும்பூ
7) நேர் நிரை நிரை நேர் - கூவிளந்நறும்பூ
8) நிரை நிரை நிரை நேர் - கருவிளந்நறும்பூ
9) நேர் நேர் நேர் நிரை - தேமாந்தண்ணிழல்
10) நிரை நேர் நேர் நிரை - புளிமாந்தண்ணிழல்
11) நேர் நிரை நேர் நிரை - கூவிளந்தண்ணிழல்
12) நிரை நிரை நேர் நிரை - கருவிளந்தண்ணிழல்
13) நேர் நேர் நிரை நிரை - தேமாநறுநிழல்
14) நிரை நேர் நிரை நிரை - புளிமாநறுநிழல்
15) நேர் நிரை நிரை நிரை - கூவிளநறுநிழல்
16) நிரை நிரை நிரை நிரை - கருவிளநறுநிழல்

## கூடுதல் வினாக்கள்
## (சிறுவினாக்கள்)

### இயல்-1

**1. திராவிட மொழிகளின் பொதுப்பண்புகளை விளக்குக.**

➢ **வேர்ச்சொற்கள் பொதுவானவை:**

சொற்களின் இன்றியமையாப் பகுதியான வேர்ச்சொற்கள் திராவிட மொழிகளில் ஒன்றாகவே அமைந்துள்ளன.

| பொது | தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் |
|---|---|---|---|---|
| வேர்ச்சொல் | கண் | கண்ணு | கன்னு | கண்ணு |
| எண்ணுப்பெயர் | மூன்று | மூணு | மூடு | மூரு |

➢ **குறில் நெடில் வேறுபாடு:**

திராவிடமொழிகளில் உயிரெழுத்துகளின் குறில், நெடில் வேறுபாடு பொருளைத் தெளிவுபடுத்துகின்றது.

➢ **பால் பாகுபாடு:**

பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது.

வீரன் - வீராங்கனை, கடுவன் - மந்தி.

➢ **வினைச்சொற்கள்:**

திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டுகின்றன.





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# பகுதி - IV (5 x 5 =25)

## 16. செய்யுள் நெடுவினாக்கள்

### இயல் - 1 தமிழ்விடு தூது (பா.நூ.ப.எண்:26)

1. தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

| தூது அனுப்பத் தமிழே சிறந்தது |
|---|
| குறிப்புச் சட்டகம் |
| ➢ முன்னுரை<br>➢ மூன்று இனங்கள்<br>➢ பத்துக் குணங்கள்<br>➢ நூறு வண்ணங்கள்<br>➢ நவரசம்<br>➢ எட்டு வனப்புகள்<br>➢ முடிவுரை |

**முன்னுரை:**

தமிழானது இனிமை, இலக்கியவளம், பாடற்சிறப்பு ஆகிய நலன்களைப் பெற்றிருப்பதாலும் கீழ்க்காணும் சிறப்புகளைக் கொண்டிருப்பதாலும் தூது செல்லத் தமிழே சிறந்தது.

**மூன்று இனங்கள்:**

குறவஞ்சி, பள்ளு பாடிய புலவர்களும் சிறப்படையுமாறு சொற்சிறப்புப் பெற்றுள்ள தமிழ்மொழி தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவினங்களையும் உறவாய்ப் பெற்றுள்ளது. சிந்தாமணியாய்த் திகழ்கிறது.

**பத்துக் குணங்கள்:**

தேவர்களும் சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களே பெற்றுள்ளனர். தமிழோ குற்றமில்லாத பத்துக் குணங்களைப் பெற்றுள்ளது.

**நூறு வண்ணங்கள்:**

மனிதரால் உண்டாக்கப்பட்ட அடிப்படை வண்ணங்கள் ஐந்து. தமிழ்மொழி குறில் முதலான நூறு வண்ணங்களைப் பெற்றுள்ளது.

**நவரசம்:**

நாவின் சுவை ஆறு. செந்தமிழோ ஒன்பான் சுவைகளைப் பெற்றுச் செவிகளுக்கு விருந்தளிக்கிறது.

**எட்டு வனப்புகள்:**

அழியாத அழகு ஒன்றே. தமிழோ அம்மை முதலிய எட்டு வனப்புகளைப் பெற்றுள்ளது.

**முடிவுரை:**

மேற்கூறிய காரணங்களால் தூது அனுப்பத் தமிழ் மொழியே சிறந்தது எனத் தமிழ்விடுதூது கூறுகிறது.

### இயல் - 2 பெரியபுராணம் (பா.நூ.ப.எண்:57)

2. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

| திருநாட்டுச் சிறப்புகள் |
|---|
| குறிப்புச் சட்டகம் |
| ➢ முன்னுரை<br>➢ வயலில் இடறும் சங்குகள்<br>➢ இணையில்லா சோழநாடு<br>➢ வானவில்<br>➢ மீன், முத்து, மலர் குன்றுகள்<br>➢ மலையைச் சுற்றும் கருமேகம்<br>➢ முடிவுரை |





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**கமுகு மரத்தின் முயற்சி:**

கமுகு மரம் தான் தோன்றிய இடத்தில் இருந்த பெருமரத்தின் நிழலை வெறுத்தது. உச்சிக்கிளையை மேலே உயர்த்தி விண்ணிலிருந்து வரும் கதிரவன் ஒளியாகிய உயிர்ப்பைத் தேடியது. மீண்டும் மீண்டும் தன் கிளையை வளைத்து, போட்டியிட்டு நீட்டியது. இதுதான் வாழ்க்கைப்போர். பெருமரத்துடன் முட்டி மோதி மேலே செல்லும் துணிச்சலே இன்பம், முயற்சி உள்ளனவே வாழ்வில் மலர்ச்சி பெறும்.

**கமுகு மரத்தின் வெற்றி:**

கமுகு மரம் கடுமையாகப் பெருமரத்துடன் முட்டி மோதித் துணிச்சலான முயற்சிகளில் ஈடுபட்டது. நம்பிக்கை, தன்முனைப்போடு கூடிய போட்டியில் கமுகு மரம் வென்றது. பெருமரத்தை விஞ்சி வளர்ச்சி நடைபோடுகிறது.

**முடிவுரை:**

நா.பிச்சமூர்த்தி அவர்கள் ஒளியின் அழைப்பு என்ற கவிதை மூலம் 'முயற்சி திருவினையாக்கும்', 'வாழ்வில் போராட்டம் முடிவில் வெற்றியாகும்' என்பதை விளக்குகிறார்.

## 17. கடிதம், உரை எழுதுதல்

**மெல்ல மலரும் மொட்டுகளுக்கான மாதிரிக் கடிதம்.**

**விண்ணப்பக் கடிதம்**

அனுப்புநர்

அ.தமிழழகன்,
15, வெற்றி நகர்,
சென்னை.

பெறுநர்

…………………அவர்கள்,
………………..அலுவலகம்,
சென்னை.

ஐயா,

பொருள்:……………………………..வேண்டுதல் சார்பு.

வணக்கம். நான் தஞ்சாவூரில் உள்ள வெற்றிநகரில் வசித்து வருகிறேன். எங்கள் தெருவில் 50 மேற்பட்டோர் உள்ளனர். எங்களுக்கு ……………………… தேவைப்படுகிறது. ஆகவே ………………………………… செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இடம்: சென்னை,
நாள்: 27.03.2020.

இப்படிக்கு,
உண்மையுள்ள,
அ.தமிழழகன்

உறைமேல் முகவரி

பெறுநர்

…………. அவர்கள்,
…………. அலுவலகம்,
சென்னை.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பின்பு பள்ளியின் மூத்த தமிழாசிரியர் வாழ்த்துரை வழங்கினார். உலகத் தாய்மொழி தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப் போட்டி ஆகியவற்றில் முதல்பரிசு பெற்ற மாணவ - மாணவிகளுக்குப் பரிசு வழங்கப்பட்டது. பின்பு மாணவ - மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியாகப் பள்ளியின் உதவித் தலைமையாசிரியர் திரு.பாரதிதாசன் அவர்கள் நன்றியுரை ஆற்ற நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே முடிவுற்றது.

இப்படிக்கு,

தமிழ் மன்றத் தலைவன்.

## இயல் - 9 (பா.நூ.ப.எண்:251)

**6. நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.**

நூலின் பெயர் : திறவுகோல்.
ஆசிரியர் : அருணகிரி.
வெளியீடு : மங்கையர்க்கரசி பதிப்பகம்.
விலை : ரூ. 20/-
பக்கம் : 72

**நூல் மதிப்புரை:**

“இந்நூலில் உடல் நலம் மற்றும் பயனுள்ள தகவல்களைத் தாங்கி எனக்கு வந்த செய்திகளைத் தொகுத்து எழுதியுள்ளேன்” என்கிறார் நூலாசிரியர். வாழ்க்கைக்குத் தேவையான செய்திகளை ஒன்று திரட்டிப் படைத்துள்ளார். பொதுவாக மக்களின் தேவையை உணர்ந்து செய்திகளைத் திரட்டி அளித்ததில் நூலின் மதிப்பு கூடியுள்ளது. மக்கள் அன்றாடம் விரும்பிப் படிக்கும் நூலாகத் திகழ்கின்றது. நூலின் தலைப்பிற்கு ஏற்றவாறு மக்களின் அறிவை விரிவாக்கும் திறவுகோலாக இந்நூல் அமைந்துள்ளது.

## கூடுதல் கடிதங்கள்

**1. சாலைவிதிகளைக் கடைப்பிடிக்குமாறு நண்பனுக்குக் கடிதம் எழுதுக.**

**நண்பனுக்குக் கடிதம்**

**இடம்:** உக்கிரன்கோட்டை,
**நாள்:** ............................

நற்பண்புமிக்க நண்பா!

நீ தற்சமயம் பள்ளிக்கு உந்து வண்டியில் சென்று வருவதை அறிந்து உவகை கொண்டேன். நீ வண்டி ஓட்டும்போது கீழ்க்காணும் சாலைவிதிகளை மறவாமல் கடைப்பிடித்திட வேண்டுகிறேன்.

1. சாலையில் எப்போதும் இடப்புறமாகவே செல்லுதல் வேண்டும். தன் முன்னர்ச் செல்லும் வண்டிகளைக் கடக்கும்போது அதன் வலப்புறமாகச் செல்லுதல் வேண்டும்.
2. வலப்பக்கம் திரும்பும் பொழுதோ, வண்டியை வலது பக்கம் நிறுத்த விரும்பும் பொழுதோ, தான் அவ்விதம் செய்யப் போவதாய் தன் வலது கையைத் தோள் மட்டத்திற்கு வெளிப்பக்கமாய் நீட்டிக் காட்டுதல் வேண்டும்.
3. ஓட்டுநர் இடப்பக்கம் திரும்ப தனது வலதுகையை நீட்டி கடிகார முள் சுற்றும் திசைக்கு எதிர்த் திசையாய்ச் சுற்ற வேண்டும்.
4. ஓட்டுநர் இடது பக்கமுள்ள தெருவில் திரும்ப வேண்டுமானால் அத்தெருவின் இடப்பக்க மூலை ஓரமாய்ச் சுற்றித் திரும்ப வேண்டும். வலப்பக்கத் தெருவில் திரும்ப விரும்பினால் ஒரு விரிந்த வளைவாகச் சுற்றித் திரும்புதல் வேண்டும்.
மேலும் சாலைகளின் ஓரங்களில் வைத்திருக்கும் அறிவிப்புகளையும் அடையாளங்களையும் கவனித்து மெதுவாக ஓட்டுக.

நல்வாழ்த்துகள்!



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com


## இயல் - 3 (பா.நூ.ப.எண்:86)

4. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

| படம் | ஊர்த் திருவிழா |
|---|---|
|  | கோதை குத்துவிளக்கேற்றி கோலமிட,<br>கோமாதா கண்கள் பார்த்திருக்க,<br><br>மேளதாளங்கள் இசை முழங்க,<br>மேலிரு வீணையும் சுரம் பொழிய,<br><br>நாதசுரமும் ஒலிக்கையிலே,<br>நங்கை நடனம் ஆடையிலே,<br><br>இறைவன் காட்சித் தருகின்றார்!<br>இன்ப வாழ்வு கொடுக்கின்றார்! |

## இயல் - 4 (பா.நூ.ப.எண்:120)

5. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

| படம் | இயந்திரமும் மனித வாழ்க்கையும் |
|---|---|
|  | காலசுழற்சி என்பார்கள்! முன்பின்<br>மாறும் என்பார்கள்!<br><br>கண்கூடாகக் கண்டுவிட்டேன்!<br>காலை சுற்றும் நாய்கூட.<br><br>கம்பீரமாய் முன்னடக்க, பகுத்தறிவு<br>மனிதன் இங்கே,<br><br>இயந்திர மனிதனின் சொல்கேட்டு<br>இயங்குகிறான் தானாக! |

## இயல் - 5 (பா.நூ.ப.எண்:149)

6. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

| படம் | கல்வி |
|---|---|
|  | படிப்படியாய் நீ கற்றிடுவாய்!<br>பாடநூல்களைப் படித்திடுவாய்!<br><br>பட்டம் பலவும் பெற்றிடவே,<br>பாங்காய் நீயும் கற்றிடுவாய்!<br><br>வள்ளுவரின் வாய்ச்சொல்லை,<br>வளமாய் நீயும் கற்றிடுவாய்!<br><br>தாய்மொழித் தமிழைப் படித்து நீயும்<br>தரணி போற்ற வாழ்ந்திடுவாய்! |

## இயல் - 6 (பா.நூ.ப.எண்:175)

7. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

| படம் | சிற்பக்கலை |
|---|---|
|  | ஆய கலைகள் அறுபத்து நான்கு<br>அவற்றில் நளினமே நாட்டியமே!<br><br>படத்தைப் பார்த்தால் தெரிந்ததுவோ!<br>சிற்பியின் சிறந்த கலைநயமே!<br><br>அழகுற உயிர் கொடுத்தானோ!<br>மெய்ம்மையான உயிருள்ள படைப்போ!<br><br>ஐயமில்லை என்ன அழகு<br>மெய்ம்மையான உயிருள்ள படைப்பே!<br><br>நாட்டியம் ஆடும் பெண்ணே!<br>நீ சிற்பியின் மகுடமே! |





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**புத்தகத் திருவிழா:**

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் வருகின்ற செப்டம்பர் 19 முதல் 28 வரை புத்தகத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதல் நாள் காலை 9.00 மணிக்கு தமிழகக் கல்வி அமைச்சர் இவ்விழாவைத் தொடங்கி வைக்கிறார். தினந்தோறும் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை நடைபெறும். இவ்விழாவில் ஒவ்வொரு நாளும் மாலை 6.00 மணிக்கு புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும். அனைவரும் பங்கு கொண்டு பயன் பெறுவீர்.

## 20. நிற்க அதற்குத் தக

**இயல் - 1** **(பா.நூ.ப.எண்:30)**

1. **உங்களுடைய நாட்குறிப்பில் இடம்பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| திங்கள் | வருத்தம் தெரிவிக்கிறேன், பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார். |
| செவ்வாய் | விளையாடும்போது ஏமாற்றிய நண்பனுக்குப் பொறுமையாக, அறிவுரை கூறினேன். அவன் இனி இதுபோல் நடக்காது என்றான். |
| புதன் | தாத்தாவை நடைப்பயிற்சிக்குக் கூட்டிச் சென்றேன். மிக மகிழ்ந்தார். |
| வியாழன் | பள்ளி வகுப்பறையை நாங்கள் சுத்தம் செய்தோம். ஆசிரியர் பாராட்டினார். |
| வெள்ளி | வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன். அம்மா பாராட்டினார். |
| சனி | கோவிலுக்குச் சென்றேன். அங்கு வாயிலில் அமர்ந்திருந்த யாசகர்களுக்குப் பணம் கொடுத்தேன். வாழ்த்தினார்கள். |
| ஞாயிறு | என் தந்தையுடன் இறகுப்பந்து விளையாடினேன். மகிழ்ச்சியாக இருந்தது. |

**இயல் - 2** **(பா.நூ.ப.எண்:61)**

2. **என் பொறுப்புகள்......**

| | |
|---|---|
| 1 | தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன். |
| 2 | வகுப்பறையில் நண்பர்கள் வைத்திருக்கும் புதிய அழகிய பொருள்களைப் பார்த்தால் ஆசை வரும். அவர்களைப்போல நானும் முயன்று உழைத்து அவற்றை என்னுடைய பணத்தில் வாங்குவேன். |
| 3 | அறையை விட்டு வெளியே செல்லும்போது மின்விசிறி, மின்விளக்குகளை நிறுத்திவிட்டுச் செல்வேன். |
| 4 | தினந்தோறும் பள்ளிக்குத் தேவையான புத்தகங்களை வரிசையாக அடுக்கி எடுத்துச் செல்வேன். |
| 5 | வீட்டில் சிறுசிறு வேலைகளில் பெற்றோருக்கு உதவுவேன். |
| 6 | எப்பொழுதும் நன்னடத்தைகளைப் பின்பற்றுவேன். |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

இயல் - 9 (பா.நூ.ப.எண்:252)

9. நான் தலைமை பொறுப்பிற்கு வந்தால்......

| | |
|---|---|
| 1 | அனைவரிடமும் பாகுபாடின்றி நடந்து கொள்வேன். |
| 2 | இயன்றவரை பிறருக்கு உதவுவேன். |
| 3 | பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடப்பேன். |
| 4 | அனைவரின் விருப்பு வெறுப்பு அறிந்து அதற்கேற்றவாறு பணிகளைப் பகிர்ந்தளிப்பேன். |
| 5 | தனிமனிதனின் உடல், மன ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பேன். |
| 6 | எதிர்பாராத சூழ்நிலையில் நிகழும் நிகழ்வுக்கு முடிந்த அளவு விரைவாக அவர்களை பாதிப்பின்றி பாதுகாப்பேன். |
| 7 | குடும்பச் சூழ்நிலைக் காரணமாகப் பணி பாதிக்காதவாறு தேவையான உதவிகளைச் செய்வேன். |
| 8 | சுயநலமின்றி பிறர் நலம் நாடும் பண்பினைக் கடைப்பிடித்து உதவுவேன். |

## 21. மொழிபெயர்த்தல்

இயல் - 1 (பா.நூ.ப.எண்:27)

1. மொழிபெயர்க்க.

1) Linguistics - மொழியியல்
2) Literature - இலக்கியம்
3) Philologist - மொழிப்புலமையாளர்
4) Polyglot - பன்மொழியாளர்
5) Phonologist - ஒலியியல் நிபுணர்
6) Phonetics - ஒலிப்பியல்

இயல் - 2 (பா.நூ.ப.எண்:58)

2. அறிஞர்களின் பொன்மொழிகளைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.

1) Every flower is a soul blossoming in nature - Gerard De Nerval.
ஒவ்வொரு பூவும் இயற்கையில் மலரும் ஓர் ஆன்மாவாகும் - ஜெரார்டு டி நெர்வல்.

2) Sunset is still my favourite colour, and rainbow is second - Mattie Stepanek.
சூரியன் மறையும் பொழுது இருக்கும் நிறமே, வானவில்லைவிட எனக்குப் பிடித்த நிறம் - மேட்டி ஸ்டீபனெக்.

3) An Early morning walk is a blessing for the whole day - Henry David Thoreau.
அதிகாலை நடைப்பயிற்சி அன்றைய ஆசீர்வாதம் - ஹென்றி டேவிட் தோரோ.

4) Just living is not enough… One must have sunshine, freedom, and a little flower - Hans Christian Anderson.
வெறுமனே வாழ்வது வாழ்வல்ல. சூரிய ஒளியும் சுதந்திரமும் சில மலர்களின் மலர்ச்சியும் வாழ்விற்குத் தேவை - ஹான்ஸ் கிரிஸ்டியன் ஆன்டர்சன்.





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**ஒற்றுமை**

ஒரு மான், ஓர் ஆமை, ஒரு காகம் மற்றும் ஓர் எலி நண்பர்களாக இருந்தன. ஒருநாள் மான் ஒரு வேட்டைக்காரனின் வலையில் சிக்கியது. அதைக் காப்பாற்ற நண்பர்கள் திட்டம் தீட்டின. திட்டத்தின்படி மான் இறந்ததுபோல அசைவின்றிப் படுத்திருந்தது. அந்த மானின்மேல் காகம் அமர்ந்து கொத்தத் தொடங்கியது. வேட்டைக்காரனின் கவனத்தைத் திசை திருப்ப, ஆமையானது அவனுடைய பாதையைக் கடந்தது. மான் இறந்துவிட்டது என்று எண்ணிய வேட்டைக்காரன் ஆமையைப் பின்தொடர்ந்தான். இதற்கிடையில் எலி அந்த வலையை மெல்ல மெல்ல மென்று, மானை விடுவித்தது. காகம் பறந்து சென்று, ஆமையைத் தூக்கிக்கொண்டு சட்டென்று வேட்டைக்காரனிடமிருந்து பறந்து சென்றது. இந்தப் பஞ்சதந்திரக் கதையின் மூலம் ஒரு குழுவாக இணைந்து செயல்பட்டால் நல்ல பயன் கிடைக்கும் என்பதைக் கற்றுக்கொள்கிறோம்.

## 22. செய்யுள் நயம் பாராட்டுதல்

**(வினாத்தாள் வடிவமைப்பில் எங்கு வேண்டுமானாலும் கேட்கப்படலாம்)**

**இயல் - 1** **(பா.நூ.ப.எண்:28)**

1. **நயம் பாராட்டுக.**

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

**- ம.இலெ. தங்கப்பா.**

| பொருளடக்கம் |
|---|
| ➢ திரண்ட கருத்து<br>➢ மையக்கருத்து<br>➢ தொடை நயம்<br>➢ அணி நயம்<br>➢ பாவகை<br>➢ சொல் நயம் |

**தலைப்பு: அகத்தின் அழகு**

**திரண்ட கருத்து:**

விரிந்த வானிலும் கடற்பரப்பிலும் உயர்ந்த மலைகளிலும் பள்ளத்தாக்கிலும் அருவியின் வீழ்விலும் புல்வெளியிலும் வயலிலும் பறவைகளிலும் எனக் காண்கின்ற பொருளிலெல்லாம் வீற்றிருந்து, கவிஞரின் பாடல்களிலும் பவனி வரும் ‘அழகு’ என்ற பேரெழிலே, நீ மக்களின் மனத்திலும் வீற்றிருக்க வேண்டுகிறேன்.

**மையக்கருத்து:**

இயற்கையின் கொடைகளிலெல்லாம் காணப்படும் அழகு மக்களின் மனதிலும் இருக்க வேண்டும்.



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**தொடை நயம்:**

**மோனை:**

**சீர் மோனை**

சீர்தோறும் (அ) அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.

**எ**த்துணையும் **எ**வ்வுயிரும் **எ**ண்ணி
**உ**டையவராய் **உ**வக்கிறார் **உ**ள்ளம்தான்
**ந**டம்புரியும் **நா**ன்தெரிந்தேன்
**வி**த்தகர்தம் **வி**ழைந்தாலே

} **சீர் மோனை**

**எதுகை:**

சீர்தோறும் (அ) அடிதோறும் முதலெழுத்து அளவொத்திருக்க இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகை.

எ**த்**துணையும் ஒ**த்**துரிமை
சி**த்**துருவாய் வி**த்**தகர்தம்

**சொல் நயம்:**

நம்முயிர்போல் எண்ணி, உள்ளம்தான் சுத்த சித்துருவாய் என்ற சொற்கள் ஆழ்ந்த அன்பினை வெளிக்காட்டுவதாக வந்து பாடலைச் சிறப்பிக்கின்றன.

**சுவை நயம்:**

பேதமுறாது எவ்வுயிரும்,
ஒத்துரிமை உடையவராய்
எம்பெருமான் நடம்புரியும் இடம் - எனச் சுவைநயமிக்க சொற்களைக் கையாண்டுள்ளார்.

**அணி நயம்:**

இறைவன் குடிகொள்ளும் இடத்தைத் தெளிவாக உள்ளவாறு கூறியுள்ளதால் இப்பாடலில் இயல்பு நவிற்சியணி பயின்று வந்துள்ளது.

## பகுதி - V (3 x 8 =24)

## 23. உரைநடைப்பகுதி நெடுவினாக்கள்

இயல் - 1 **திராவிட மொழிக்குடும்பம்** (பா.நூ.ப.எண்:26)

1. **திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

| திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணை |
|---|
| பொருளடக்கம் |
| ➢ முன்னுரை<br>➢ பிறமொழித் தாக்கமின்மை<br>➢ ஹீராஸ் பாதிரியாரின் கருத்து<br>➢ கால்டுவெல் ஒப்பிலக்கணம்<br>➢ பிறநாடுகளில் தமிழ்<br>➢ தமிழின் இலக்கண வளம்<br>➢ முடிவுரை |

**முன்னுரை:**

தமிழின் தொன்மையும் பழமையுமே மற்ற மொழிகளிலிருந்து தமிழைச் சிறக்கச் செய்கிறது. எத்தகைய கால மாற்றத்திலும் எல்லாப் புதுமைகளுக்கும் ஈடுகொடுத்து இயங்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு. எனவே திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழ் பெரிதும் துணைபுரிகிறது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**முன்னுரை:**

உலக நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டுவது நம் இயல்பு. பண்டைய இலக்கியங்களில் தமிழ்ப் புலவர்களால் இப்பண்பு பாராட்டிப் பாடப்பட்டுள்ளது.

**பிறநாட்டவருடன் உறவு பாராட்டல்:**

"யாதும் ஊரே யாவரும் கேளிர்!" என்கிறார் கணியன் பூங்குன்றனார்.
"யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு." என்கிறார் வள்ளுவர்.

**பிறர் நலவியல்:**

**'என் கடன் பணி செய்து கிடப்பதே'** என்னும் குறிக்கோள் பிறர் நலத்தைப் படிப்படியாக விரும்பக் கற்றுக் கொடுக்கும். மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள். பிறப்போ, சாதியோ, சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ, உயர்த்தவோ முடியாது என்னும் பண்பு இந்தியாவில் பண்டுதொட்டே நிலவியுள்ளது. திருக்குறளில் உள்ள பிறர் நலவியல் கருத்தினை திருவள்ளுவர் காலத்திற்கு முன்பே தமிழர்கள் பின்பற்றினர்.

**ஒற்றுமை உணர்ச்சி:**

பிறர் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி ஒற்றுமை நிலவச் செய்தது பாணரும் புலவரும் ஆவர். புலவர், பாணர் இருவருக்கும் வேறு நாடு, மொழி உண்டு. ஆனால் தமிழ் போற்றும் மன்னர்கள், வள்ளல்கள் அவையில் வாழ்த்திப் பாடியதால் தமிழகம் என்ற ஒற்றுமை உணர்வு மேலோங்கி இருந்தது.

**பரந்த மனப்பான்மை:**

அகத்திணை இலக்கியங்கள் பல்வேறு வகைகளில் பரந்த மனப்பான்மையையும் விரிவான ஆளுமையையும் வளர்த்தது. 'படுதிரை வையம் பாத்திய பண்பே' இவ்வாறு தொல்காப்பியர் நிலத்தைப் பிரித்தது உலகின் பிரிவாகவே அமைந்தது. சாதி, மதம் எனப் பிரிவுபடாமல் இயற்கையை மட்டும் வகைப்படுத்தினார்.

**ஒன்றே உலகம்:**

மக்கள் அனைவரும் மக்கட்தன்மையை வளர்க்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட நூல் திருக்குறள். ஜி.யு.போப் திருவள்ளுவரை 'உலகப் புலவர்' என்று போற்றுவது ஒன்றே உலகம் என்பதை உணர்த்துகிறது.

**விரிவாகும் ஆளுமை:**

திருவள்ளுவர் இரண்டு அறிவுரைகளில் இந்த குறிக்கோளை அடைவதைப் பற்றி கூறியுள்ளார். "உள்ளற்க உள்ளம் சிறுகுவ" என்றும், "உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்" என்றும் கற்பித்துள்ளார்.

**முடிவுரை:**

மேற்கண்ட கருத்துகள் மூலம் தமிழ் இலக்கியங்கள் சான்றாண்மைக் கருத்துகளை உலகத்திற்கே எடுத்துக்காட்டுகின்றன என்பதில் ஐயமில்லை.

## 24. துணைப்பாட நெடுவினாக்கள்

## மெல்ல மலரும் மொட்டுக்களுக்கான துணைப்பாடம்

### இயல் - 2 தண்ணீர் (பா.நூ.ப.எண்:57)

1. **'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.**

| தண்ணீர் |
|---|
| **குறிப்புச் சட்டகம்** |
| ➢ முன்னுரை<br>➢ தண்ணீர்ப் பஞ்சம்<br>➢ தொடர்வண்டித் தண்ணீர்<br>➢ இந்திராவின் துணிச்சல்<br>➢ முடிவுரை |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## துணைப்பாடப் பகுதி நெடுவினாக்கள்

### இயல் - 2 தண்ணீர் (பா.நூ.ப.எண்:57)

1. 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

| தண்ணீர் |
|---|
| குறிப்புச் சட்டகம் |
| ➢ முன்னுரை<br>➢ தண்ணீர்ப் பஞ்சம்<br>➢ தொடர்வண்டித் தண்ணீர்<br>➢ இந்திராவின் துறுதுறுப்பு<br>➢ தொடர்வண்டியில் பயணம்<br>➢ வீடு திரும்பிய இந்திரா<br>➢ முடிவுரை |

**முன்னுரை:**

இன்றைய சூழலில் நீர் நெருக்கடி உச்சத்தில் இருக்கிறது. பல ஊர்கள் நீர் இல்லாமல் தவித்து வருகின்றன. இராமநாதபுரத்தில் உள்ள சிற்றூரும் அப்படித்தான். நீரெல்லாம் உப்பாகிவிட்டதால் குடிநீருக்கு அந்த ஊரில் பஞ்சம்.

**தண்ணீர்ப் பஞ்சம்:**

மழைக்காலங்களில் கண்மாய், ஊருணியெல்லாம் வெள்ளம். மூன்றாம் நாள் மீண்டும் நீரில்லா பூமியாகிவிடும். அந்நாட்களில் அவர்கள் பிலாப்பட்டிக்கு மூன்று மைல் நடந்து சென்று நீர் எடுத்து வருவார்கள். நடந்து வந்ததில் எத்தனையோ நாள் நோவு கண்டிருக்கிறார்கள்.

**தொடர்வண்டித் தண்ணீர்:**

இதுபோன்ற சமயங்களில் அவர்களுக்கு கைக்கொடுத்தது தொடர்வண்டியில் பிடிக்கும் நீர்தான். போட்டிப்போட்டுக் கொண்டு அரைகுடமும் கால் குடமுமாக நீர் பிடிப்பார்கள். அதுவே அடுத்தநாள் வரை வைத்துக் கொள்வார்கள்.

**இந்திராவின் துறுதுறுப்பு:**

அவ்வூரில் உள்ள இந்திரா மற்ற பெண்களைப் போல சண்டை சச்சரவுகளில்லாமல் நீர் பிடிப்பதில் கெட்டிக்காரி. அன்றும் அப்படித்தான். அரைகுடம் நிரம்புவதற்குள் தொடர்வண்டி கிளம்பிவிட்டது. இன்னும் கொஞ்சம் நீர் பிடிக்கலாம் என நினைத்தவளால் கீழே இறங்க முடியவில்லை. தொடர்வண்டி வேகமெடுத்தது.

**தொடர்வண்டியில் பயணம்:**

இந்திரா தொடர்வண்டியில் சென்றுவிட்டாள் என்பதை அறிந்த பெற்றோர் இராமநாதபுரம் முழுவதும் தேடினர், கிடைக்கவில்லை. உறவினர்களும் அங்குமிங்கும் தேடினர். இந்திரா இல்லாமல் வருத்தத்துடன் வீடு திரும்பினர். இந்திராவின் தாயார் மனவேதனையுற்றார்.

**வீடு திரும்பிய இந்திரா:**

கதறி அழுத தாயாருக்கு இந்திரா எங்கேயாவது தண்டவாளத்தில் விழுந்துவிட்டாளோ என்று பயம் கவ்வியது. உடனே தொடர்வண்டி நிலையத்தில் உள்ள இரயில் பாதையில் ஓடத் தொடங்கினாள். தாயாரைத் தொடர்ந்து பலரும் ஓடினர். சற்று தொலைவில் ஓர் உருவம் வருவதைக் கண்டார்கள். இந்திராதான் அது. நிறைகுடத்துடன் நடந்து வந்து கொண்டிருந்தாள்.

**முடிவுரை:**

இந்திராவின் ஐயா "நீரைச் சுமந்து கொண்டு ஏன் வந்தாய்? ஊற்றியிருக்க வேண்டியதுதானே!" என்றார். "ஐயா, நாளை வரை நீருக்கு என்ன செய்வது?" என்று வெள்ளந்தியாய்க் கேட்டாள் இந்திரா! சாமானியர்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையால் படும் துன்பங்களை இக்கதை எடுத்துரைக்கிறது.





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**விண்வெளி அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை:**

மாணவ சமுதாயத்தினர் விண்வெளி ஆய்வில் ஈடுபட வேண்டும்.

**முடிவுரை:**

விண்வெளியில் தமிழரின் அறிவு பற்றி இங்குக் கண்டோம்.

**குறிப்பு:**

| | |
|---|---|
| தலைப்பு | - 1 (அ) ½ மதிப்பெண் |
| குறிப்புச்சட்டகம் | - 1 (அ) ½ மதிப்பெண் |

**உட்தலைப்பு:**

| | |
|---|---|
| முன்னுரை | - 1 மதிப்பெண் |
| முடிவுரை | - 1 மதிப்பெண் |

தகுந்த மேற்கோள் கொடுக்கப்பட்டு விளக்கம் கொடுத்தால் உட்தலைப்பிற்கு 4 மதிப்பெண்.

## மெல்ல மலரும் மொட்டுகளுக்கான பொதுக்கட்டுரைகள்

**இயல் - 7** **(பா.நூ.ப.எண்:205)**

1. **பயண அனுபவங்களை விவரிக்க. (அல்லது) "எனது பயணம்" என்னும் தலைப்பில் உங்களது பயண அனுபவங்களை வருணித்து எழுதுக.**

**எனது பயணம்**

**குறிப்புச் சட்டகம்**

- முன்னுரை
- கொல்லிமலை அமைவிடம்
- ஆகாய கங்கை அருவி
- காவல் தெய்வங்கள்
- கொல்லிமலை பெயர்க்காரணம்
- முடிவுரை

**முன்னுரை:**

கொல்லிமலைக்குப் பயணம் செய்தபோது கிடைத்த எனது பயண அனுபவங்களைப் பற்றி இங்குக் காண்போம்.

**கொல்லிமலை அமைவிடம்:**

கொல்லிமலை நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 70 கொண்டை ஊசி வளைவுகளை உடைய மலைப்பகுதி.

**ஆகாய கங்கை அருவி:**

அய்யாறு நதி, மலை மேலிருந்து பல மூலிகைகளைக் கடந்து கீழே வருகிறது. இதுவே ஆகாய கங்கை அருவி. இதில் குளித்தால் பல நோய்கள் நீங்கும். இதுவே மலைவாழ் மக்களின் கருத்தாகும்.

**காவல் தெய்வங்கள்:**

காவல் தெய்வங்களான **'எட்டுக்கை அம்மன்'** என்னும் கொல்லிப்பாவை, பெரியண்ண சாமி கோவில் ஆகியன இங்கு அமைந்துள்ளன.

**கொல்லிமலை பெயர்க்காரணம்:**

கொல்லிமலையில் உள்ள காடுகளில் நிலவிய கடுமையான சூழல் காரணமாக கொல்லிமலை என்று பெயர்ப்பெற்றது..

**முடிவுரை:**

கொல்லிமலையில் நானும் எனது நண்பர்களும் பயணம் செய்தபோது அறிந்த செய்திகளைப்பற்றி இங்கு நினைவுகூர்ந்துள்ளேன்.



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**ஆகாய கங்கை அருவி:**

அய்யாறு நதி சுமார் 300 அடி உயரத்தில் இருந்து விழுவதை ஆகாய கங்கை அருவி என்று அழைக்கின்றோம். பல அரிய மூலிகைகள் கொண்ட கொல்லிமலையில் இருந்து வருவதால் இந்த அருவியில் குளித்தால் பல நோய்கள் நீங்கி மனதும் உடலும் புத்துணர்ச்சி பெரும் என்பதை அங்குள்ள மலைவாழ் மக்களிடம் கேட்டறிந்தேன்.

**காவல் தெய்வங்கள்:**

**'எட்டுக்கை அம்மன்'** என்று அழைக்கப்படும் கொல்லிப்பாவை அம்மன் காவல் தெய்வமாக கொல்லிமலையைக் காத்து வருவதாக மக்கள் கூறுகிறார்கள். பெரியண்ணசாமி கோவில் கொல்லிப்பாவை கோவிலிலிருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் அடர்ந்த காட்டுப்பகுதியில் உயரமான இடத்தில் உள்ளது.

**கொல்லிமலை பெயர்க்காரணம்:**

கொல்லிமலைக் காடுகளில் நிலவிய கடுமையான சூழலின் காரணமாக, இம்மலைப் பிரதேசத்துக்கு கொல்லிமலை என்று பெயர் வந்தது. 'கொல்' என்னும் குறிப்புச் சொல் ஓசையைக் குறிக்கும். இம்மலையில் அதிகப்படியான மூலிகைகள் உள்ளன. ஆதலால் மூலிகைகளின் ராணி என்றும் இம்மலை அழைக்கப்படுகிறது.

**முடிவுரை:**

கொல்லிமலையில் உள்ள அரப்பளீஸ்வரர் கோயிலிருந்து உணவு உண்ட பிறகு அங்குள்ள மலைவாழ் மக்களிடம் கொல்லிமலையின் சிறப்பைக் கேட்டறிந்த பிறகு நானும் எனது நண்பர்களும் பயணத்தைத் தொடர்ந்தோம். அங்குக் கண்ட இயற்கைக் காட்சிகளையும் கேட்டறிந்த செய்திகளையும் மீண்டும் நினைவுக் கூர்ந்து எனது பயணக்கட்டுரையை எழுதியுள்ளேன்.

## கூடுதல் பொதுக்கட்டுரைகள்

**2. 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

| சான்றோர் வளர்த்த தமிழ் |
|---|
| **குறிப்புச் சட்டகம்** |
| ➢ முன்னுரை<br>➢ தென்னவர் வளர்த்த தமிழ்<br>➢ சிற்றிலக்கியங்களின் சிறப்பு<br>➢ தமிழ் வளர்த்த சான்றோர்கள்<br>➢ தமிழ்மொழியின் தொன்மை<br>➢ முடிவுரை |

**முன்னுரை:**

மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்மொழி மக்களால் பேசப்பட்டு இன்றும் இளமையாகவும் இனிமையாகவும் உயிர்ப்போடும் இருந்து வருகிறது. இக்கருத்தை மகாகவி பாரதியார்,

> **"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**
> **இனிதாவது எங்கும் காணோம்"**

என்று பாடியுள்ளது, தமிழ் மொழியின் சிறப்பை உணர்த்துவதாக அமைந்துள்ளது. தமிழ் மொழி வளர்ந்த விதத்தை இக்கட்டுரையில் காண்போம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

6. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு தருக.
(முன்னுரை - சங்ககாலத்தில் பெண்களின் நிலை - இடைக்காலப் பெண்கள் - பெண்கல்வியின் தேவை - பெண்கல்விக்குப் பாடுபட்டவர்கள் - சாதனைப் பெண்கள் - முடிவுரை)

| பெண்கல்வி |
|---|
| குறிப்புச் சட்டகம் |
| ➢ முன்னுரை<br>➢ சங்ககாலத்தில் பெண்களின் நிலை<br>➢ இடைக்காலப் பெண்கள்<br>➢ பெண்கல்வியின் தேவை<br>➢ பெண்கல்விக்குப் பாடுபட்டவர்கள்<br>➢ சாதனைப் பெண்கள்<br>➢ முடிவுரை |

**முன்னுரை:**

**மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவம் செய்திடல் வேண்டுமம்மா!**

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் என்பார்கள். காதால் கேட்டுப் பெறும் கல்வியே ஒருவரின் வாழ்வை நிர்ணயிக்கிறது. இக்கருத்து ஆண், பெண் இருபாலருக்கும் பொது. அன்பு காட்டுவதில் தாயாக, வழிநடத்துவதில் தமக்கையாக, பின்பற்றுவதில் தாரமாக வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்குலத்திற்கும் கல்வி அவசியமல்லவா?

**சங்ககாலத்தில் பெண்களின் நிலை:**

**ஔவையும் குயத்தியும் வெறிபாடிய கண்ணியும்**
**கொவ்வைத் தமிழைக் கொண்டு பாடிய மாசாத்தியும்**
**செழித்திருந்த காலம் - புகழ் வளர்த்திருந்த காலம்.**

இவ்வடிகள் உணர்த்தியிருக்கும் சங்ககாலப் பெண்களுள் இல்லத்தரசிகளாக வாழ்ந்தவர்களும் இருக்கிறார்கள்; துயரைத் தீர்க்க தூது போனவர்களும் இருக்கிறார்கள். கல்வி கற்க விரும்பிய பெண்களுக்குத் தாராளமாய்க் கிடைத்துள்ளது. கைகேயி, மாதவி போன்றவர்கள் கல்வி நலத்திற் சிறந்து விளங்கினர்.

**இடைக்காலப் பெண்கள்:**

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்ற நிலை இடைக்காலத்தில் உருவானது. பெண்கள் வீட்டோடு ஒடுக்கப்பட்டார்கள். பண்பாடு என்ற பெயரில் சில கடமைகள் அவர்களுக்குள் திணிக்கப்பட்டன. எழமுடியாமல் வீழ்ந்தது பெண் சமுதாயம்.

**பெண்கல்வியின் தேவை:**

குடும்பத்தில் ஓர் ஆண் கல்வி கற்றால் அது அவனுக்கு மட்டுமே பயன்படும். அதுவே ஒரு பெண் கல்வி கற்றால் அது குடும்பத்திற்கே பயன்படும். காலம் மாறியது. பெண்களுக்காகப் போராடிய பலரின் முயற்சியால் பெண்கள் அடுப்பங்கரையைவிட்டு வெளியே வரத் தொடங்கினர். வெளியுலகத்தோடு இணைந்து வாழ அவர்களுக்குக் கல்வி தேவைப்பட்டது.

**சுயமாகச் சிந்திக்கத் துணையாகும் கல்வி**
**சொந்தக்காலில் நிற்கத் துணையாகும் கல்வி**

**பெண்கல்விக்குப் பாடுபட்டவர்கள்:**

பெரியார், திரு.வி.க, பாரதியார் போன்றோர் பெண்கல்விக்காகக் குரல் கொடுத்தார்கள். 1882 ஆம் ஆண்டு ஹண்டர் குழு பெண்கல்வி வேண்டுமென பரிந்துரை செய்தது.

## 26. செய்யுள், உரைநடை, துணைப்பாடம் கற்பவை கற்றபின் வினாக்கள்

### இயல்-1 திராவிட மொழிக்குடும்பம் (பா.நூ.ப.எண்:7)

1. **உங்கள் பெயருக்கான விளக்கம் தெரியுமா? உங்கள் பெயரும் உங்கள் நண்பர் பெயரும் தனித்தமிழில் அமைந்துள்ளதா? கண்டறிக.**

   என் பெயர் : சுப்ரமணியன்- முருகனின் வேறொரு பெயர்.

   நண்பன் பெயர்: ஆகாஷ் - ஆகாயம் போன்றவன் (பிறமொழி எழுத்து கலந்துள்ளது).

2. **பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ்மொழியின் வேர்ச்சொற்கள், வடிவ மாற்றம் பெறுகின்றன என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

   **(எ.கா) செய் - செய்தாள், செய்கிறாள், செய்வாள், செய்து, செய்த, செய்வீர், செய்கிறோம்.**

| வடிவ மாற்றம் | வா | படி | ஓடு | காண் |
|---|---|---|---|---|
| **இறந்தகாலம்** | வந்தான் | படித்தான் | ஓடினான் | கண்டான் |
| **நிகழ்காலம்** | வருகிறான் | படிக்கிறான் | ஓடுகிறான் | காண்கிறான் |
| **எதிர்காலம்** | வருவான் | படிப்பான் | ஓடுவான் | காண்பான் |
| **பெயரெச்சம்** | வந்த | படித்த | ஓடிய | கண்ட |
| **வினையெச்சம்** | வந்து | படித்து | ஓடி | கண்டு |
| **தன்மை** | வந்தேன்<br>வந்தோம் | படித்தேன்<br>படித்தோம் | ஓடினேன்<br>ஓடினோம் | கண்டேன்<br>கண்டோம் |
| **முன்னிலை** | வந்தாய்<br>வந்தீர் | படித்தாய்<br>படித்தீர் | ஓடினாய்<br>ஓடினீர் | கண்டாய்<br>கண்டீர் |
| **படர்க்கை** | வந்தான்<br>வந்தாள்<br>வந்தது<br>வந்தனர்<br>வந்தன | படித்தான்<br>படித்தாள்<br>படித்தது<br>படித்தனர்<br>படித்தன | ஓடினான்<br>ஓடினாள்<br>ஓடியது<br>ஓடினர்<br>ஓடின | கண்டான்<br>கண்டாள்<br>கண்டது<br>கண்டனர்<br>கண்டன |

### தமிழோவியம் (பா.நூ.ப.எண்:9)

3. **பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் இரண்டு மணித்துளிகள் வகுப்பில் பேசுக.**

   மரியாதைக்குரிய தமிழாசிரியர் அவர்களுக்கும் என்னுயிர் நண்பர்களுக்கும் வணக்கத்தை உரித்தாக்குகிறேன். இன்று கர்மவீரர், படிக்காத மேதை, காமராசரின் பிறந்தநாள். கல்வி வளர்ச்சி நாள். கிராமத்தில் ஏழ்மையில் வாழும் குழந்தைகளும் கல்விகற்க வேண்டும் என்ற தூய எண்ணத்துடன் மதியஉணவுத் திட்டத்தையும் இலவசக்கல்வித் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தி நாட்டை வளர்ச்சிப்பாதையில் கொண்டு சென்ற பெருந்தலைவர் பிறந்தநாள். பலரின் வாழ்க்கை, பாதையில்லாமல் அழிகிறது. சிலரின் வாழ்க்கையே வரலாறாகிறது. அப்படிப்பட்ட வரலாற்று நாயகனாக விளங்கியவரே காமராசர் அவர்கள். அவரின் கனவை நனவாக்குவதே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடன்.

   கல்வி கற்போம்!
   நாட்டை உயர்த்துவோம்!

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**புறநானூறு** **(பா.நூ.ப.எண்:46)**

**16. பின்வரும் புறநானூற்றுத் தொடர்களுக்கான பொருளைப் பள்ளி நூலகத்திற்குச் சென்று அறிந்து எழுதுக.**

- **உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! (புறம்-18)**
  இவ்வுலகத்து உயிர்களுக்கு உணவிடுபவர் உயிர் கொடுத்தவராக மதிக்கப்படுவார்.
- **உண்பது நாழி உடுப்பவை இரண்டே! (புறம்-189)**
  எவ்வளவு செல்வத்தைப் பெற்றிருந்தாலும் உண்பது நாழியளவே! உடுத்திக் கொள்வது மேலாடை, கீழாடை இரண்டே.
- **யாதும் ஊரே யாவரும் கேளிர்! (புறம்-192)**
  எல்லா ஊர்களும் நமது ஊரே, அனைத்து மக்களும் நம்முடைய உறவினர்களே.
- **சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே! நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே! (புறம்-312)**
  புதல்வர்களை ஒழுக்கத்தில் சிறந்த சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடமை. நாட்டுமக்களுக்கு நன்முறைகளைத் தருவது வேந்தனின் கடமை.
- **உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே! (புறம்-183)**
  தான் பாடங்கேட்கும் ஆசானுக்குத் தேவையான உதவிகளைச் செய்தும், மிகுந்த பொருள் கொடுத்தும் அவர் கருத்துடன் மாறுபடாமல் கல்வி கற்பதே நல்லது.

**தண்ணீர்** **(பா.நூ.ப.எண்:51)**

**17. உலகில் நீர் இல்லை என்றால் என்னவெல்லாம் நடக்கும் என்பதைக் கற்பனை செய்து உங்கள் கருத்துகளை வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.**

**மாணவர்-1** : நீர்ப்பற்றாக்குறை இப்படியே நீடித்தால் இன்னும் சில ஆண்டுகளில் வறண்ட பாலைவனமாகிவிடும்.

**மாணவர்-2** : அப்படியானால் மக்களிடையே நீருக்காகச் சண்டைகள் உருவாகும். உணவுப்பொருள் விளையாது.

**மாணவர்-1** : நாம் மீண்டும் ஆதிமனிதன் நிலைக்குத் தள்ளப்படுவோம்.

**மாணவர்-2** : அதுமட்டுமல்ல, பசுமையைக் கண்ணால்கூட காண இயலாது. ஆக்ஸிஜன் தட்டுப்பாடு ஏற்படும்.

**மாணவர்-3** : பிற உயிரினங்களெல்லாம் அழிந்து போகும்.

**மாணவர்-1** : நாடெங்கும் வன்முறைகள் தழைத்தோங்கும்.

**மாணவர்-2** : அடுத்த உலகப்போர் ஒன்று உருவானால் அது தண்ணீருக்காகத்தான் இருக்கும் என்று நமது பாடப்புத்தகத்தில் உள்ளதல்லவா?

**மாணவர்-3** : இந்நிலை மாற்ற வேண்டியது அவசியம். ஆகவே, இப்பொழுதே நீரைச் சேமிக்க வேண்டும்.

**18. பீங்... பீங்...என்ற சத்தத்துடன் தண்ணீர் வாகனம் ஒன்று வேகமாக வந்து நின்றது. அம்மா குடங்களுடன் ஓடிச்சென்று வரிசையில் நின்றாள். அப்போது கருமேகங்கள் திரண்டன... கதையைத் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.**

**விண்ணின் துளி! மண்ணின் விழி!**

பீங்... பீங்... என்ற சத்தத்துடன் தண்ணீர் வாகனம் ஒன்று வேகமாக வந்து நின்றது. அம்மா குடங்களுடன் ஓடிச்சென்று வரிசையில் நின்றாள். அப்போது கருமேகங்கள் திரண்டன. கனமழை பெய்யும்போல் தெரிகிறது. ஆனாலும் வரிசையில் கூட்டம் குறையவில்லை. மழையை நம்பிக் கிடைக்கின்ற நீரை விடமுடியாது. எனவே நீரைப் பிடித்துச் செல்ல அம்மா தொடர்ந்து வரிசையில் நின்றாள். அவள் உடல்நிலை சரியில்லாதவள். நீண்ட நேரம் நிற்க முடியாது. தண்ணீர் வண்டிக்காரன் எல்லோரையும் அதட்டிக் கொண்டிருந்தான்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## இராவணகாவியம் (பா.நூ.ப.எண்:160)

**51. ஐவகை நிலங்களில் உங்கள் மாவட்டம், ஊர் அமைந்த நிலவகை பற்றியும் அதன் கவின்மிகு காட்சியைப் படக்கட்டுரையாக்குக.**

தமிழர்கள் நிலத்தின் தன்மையைப் பொறுத்து ஐவகைகளாகப் பிரித்து உள்ளனர். அவையாவன: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.



**குறிஞ்சி** : மலையும் மலையைச் சார்ந்த பகுதி

**முல்லை** : காடும் காட்டைச் சார்ந்த பகுதி

**மருதம்** : வயலும் வயலைச் சார்ந்த பகுதி

**நெய்தல்** : கடலும் கடலைச் சார்ந்த பகுதி

**பாலை** : வறண்ட சுரம் அதைச் சார்ந்த பகுதி

**மருதநிலம்:**

சோழனூர் என்னும் ஊர் வயலும் வயலைச் சார்ந்த பகுதியாகும். இங்கு ஏரி, குளம், கிணறு என பல்வேறு நீர் நிலைகள் உள்ளன. அதில் மழைக்காலங்களில் நீர் வழிந்தோடும். முப்பருவமும் பெய்யும் மழைநீரைச் சேகரித்து வைக்க இந்த நீர்நிலைகள் உதவுகின்றன. எண்ணெய் வித்துகள், தானியங்கள் போன்றவை வறண்ட காலத்தில் பயிரிடுவர். மற்ற மழைக்காலங்களில் பணப்பயிர்களான வாழை, மஞ்சள், கரும்பு பயிர்களைப் பயிரிடுகின்றனர். இக்காலங்களில் பசுமையான தோற்றத்துடன் இக்கிராமம் காட்சியளிக்கிறது. எங்குப்பார்த்தாலும் மரங்களும் பயிர்களும் பசுமையாகக் காட்சியளிக்கின்றன. இதனால் இக்கிராமம் இயற்கை எழில்மிக்க கிராமமாகத் திகழ்கிறது.

**52. இப்பாடப்பகுதியில் உங்களை ஈர்த்த கவிதைக் காட்சியினை ஓவியமாகத் தீட்டுக. / கவிதை வடிக்க.**



**மருத நிலம்**

கண்ணால் வியப்புறக் கண்டேன்
கற்பனையில் மூழ்கிக் கண்டேன்
ஆம், இயற்கையைக் கண்டேன்
மருத நிலத்தைக் கண்டேன்
அதில் உள்ளம் மகிழுற கண்டேன்
எழில்மிகு காட்சியைக் கண்டேன்
மனமும் உள்ளமும் நெகிழ்ந்தேன்
பாடமும் கற்றுத் தெளிவு பெற்றேன்
அற்புத படைப்பு - இனி வாழ்நாளில்
ஒருமுறையேனும் நானும் படைப்பேன்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

**1. மின்சார சேமிப்பு பற்றிய விழிப்புணர்வு முழக்கத் தொடர்களை எழுதுக.**

- மின்சாரத்தைச் சேமிப்போம்! செலவினத்தைத் தவிர்ப்போம்!
- மின்சார சேமிப்பு! நாட்டின் பொருளாதாரப் பாதுகாப்பு!
- சிக்கனமான மின்சாரம்! செம்மையான வாழ்வு!
- மின்சாரத்தைச் சேமிப்போம்! சூரிய சக்தியைப் பயன்படுத்துவோம்!
- வெப்பமயமான பூமி! வெறுமையாகும் வாழ்க்கை!
- மின் சிக்கனம்! தேவை இக்கணம்!
- நாட்டு வளத்தைக் காக்க, வீட்டு மின்சாரத்தைச் சேமிப்போம்!

**2. சாலை விதிகளைப் பின்பற்ற பயன்படுத்தும் விழிப்புணர்வு தொடர்கள் ஐந்தினை எழுதுக.**

- விழிப்புடன் பயணம்! விபத்தில்லாப் பயணம்!
- சாலையில் பேசாதே கைபேசி! காலன் வருவான் நீ யோசி!
- வாழ்க்கையில் முந்துங்கள், வாகனத்தில் அல்ல!
- தலைக்கவசம் இல்லாத சாலை! உயிர்க்கவசம் இல்லாத பாதை!
- சாலைவிதிகளை மீறாதே! சாகசப்பயிற்சி செய்யாதே!
- வேகம் விவேகமாக வேண்டும்! சோகமாகக் கூடாது!
- விபத்தில்லா சாலை! பூக்கள் நிறைந்த சோலை!

**3. வயதான காலத்தில் பெற்றோர்களைப் பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வுத் தொடர்களை எழுதுக.**

- பெற்றோரைக் காப்பதே, பெருமைமிகு வாழ்க்கையே!
- பணத்தை சேமிப்பதை விடு! அன்பைச் சேமிப்பதை நாடு!
- தாய்தந்தை மகிழ்ச்சியே! இல்லாதவன் வீழ்ச்சியே!
- மாதா பிதா வழிபாடு! சிறக்கும் உந்தன் செயல்பாடு!
- அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்! அவர்களைக் காப்பவன் மாந்தருள் தெய்வம்!
- மூத்தோர் சொல்வழி நடந்திடுவோம்! முதியோர் இல்லங்களைப் போக்கிடுவோம்!
- அரசனின் கடமை நாட்டைக் காப்பது! மகனின் கடமை பெற்றோரைக் காப்பது!

# 27. விடைக்குறிப்புகள்

## பகுதி I (15x1=15)

### மாதிரி வினாத்தாள் - 1

1. இ) சிற்றிலக்கியம்
2. அ) அ, இ
3. இ) எருதுகட்டி
4. ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
5. ஆ) சாவித்திரிபாய் பூலே
6. இ) மூன்றும் சரி
7. இ) முல்லை
8. ஆ) நாணமும் இணக்கமும்
9. ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை
10. ஆ) ந.பிச்சமூர்த்தி
11. அ) ஒரு சிறு இசை
12. அ) பெருங்கடுங்கோ
13. இ) குறுந்தொகை
14. அ) பெண்யானை, ஆண்யானை
15. அ) பாலை, தலைவன் விரைந்து வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றியது.



• ஞானம் • ஜெயம் • மகிழ்ச்சி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# நமது வெளியீடுகள்

| | |
|---|---|
| XII | தமிழ் & ஆங்கிலம் |
| XI | தமிழ் & ஆங்கிலம் |
| X | தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் & சமூக அறிவியல் |
| IX | தமிழ் & ஆங்கிலம் |

KSJ TRB ACADEMY
• Knowledgeful • Successful • Joyful

**KSJ TRB ACADEMY**
Namakkal

# KSJ Publications

272 E3 C, Ezhil Nagar, R.P. Pudur
Namakkal - 637 001
E-mail : ksjpublications@gmail.com
Web : www.ksjeduserves.com

**For Orders : 89036 85635 / 74180 21847**

₹250